பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை (05-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:09



# இன்று ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பு இணக்கப்பாடு குறித்துப் பேசுவர்!



கொழும்பு,டிசெ.5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சந்திக்கிறார். இரண்டில் ஒன்று - அதாவது இருவரும் இணைந்து செயற்பட்டு விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் தொடர்வதற்கு வழி ஏற்படுமா, இல்லையா என்பது இன்று தெளிவாகி விடும். ஏற்கனவே காலக்கெடு வைகசுப்பட்டபடி இம்மாதம் 15 ஆம் திகதி வரை காத்திருக்கத் தேவையில்லை. சந்திப்பு வெற்றியளிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நம்பிக்கை தெரிவித்தார். தோல்வி என்றால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அரசு தயார் என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும ஜனாதிபதி சந்திரிகாவும் இன்று (வெள்ளிக்கிழமை) சந்திக்கின்றனர். இந்தச் சந்திப்பின்போது தற்சமயம் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் தடைக்கற்கள் நீக்கப்படலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனும் ஐ.தே.கட்சி தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவும் முதன்முறையாக ஜனாதிபதியுடன் நேரடியாக நடத்திய பேச்சுக்கள் இதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தி உள்ளன.

இதுவரை காலமும் அதிகாரிகள் மட்டத்திலேயே பேச்சுக்கள் நடைபெற்றன. நேற்று முதன்முதலாகப் பிரதமரின் செயலாளரும் கட்சியின் தவிசாளரும் நேரடியாக ஜனாதிபதியைச் சந்தித்து அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இன்றைய சந்திப்பு மற்றும் ஒரு வழியில் முக்கியத்துவம் பெறுகின்றது. டிசெம்பர் 5 ஆம் திகதிதான் நாட்டு மக்கள் பிரதமரிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்கும் ஆணையை வழங்கினர். இன்று பிரதமரின் ஆட்சி இரண்டு வருடங்களை

(18ஆம் பக்கம் பார்க்க)

# வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்காததை எதிர்த்து உயர்நீதிமன்றில் உரிமை மீறல் வழக்கு

## மாவை எம்.பி. தாக்கல்



கொழும்பு,டிசெம்பர்5

**வலி. வடக்கு பாதுகாப்பு வலயம் சட்டபூர்வமாகவும், வர்த்தமானி மூலமாகவும் பிரகடனம் செய்யப்படவில்லை. அந்தப் பகுதியில் மீளக்குடியமர அனுமதி மறுப்பது அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே, அங்கு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கும்படி உத்தரவிட வேண்டும்.**

**இப்படிக் கோரும் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.**

வலி. வடக்கைச் சேர்ந்த மற்றும் இரு பொதுமக்களின் சார்பிலும் இதே போன்ற வேறு இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் ஆகியோருக்கு எதிராக இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

- பாதுகாப்பு வலயப் பிரகடனம் சட்ட ரீதியான ஒன்றல்ல.
- இந்நிலையில் அத்தகைய ஒன்றைக் காட்டி வலி. வடக்கில் மாவிட்டபுரத்தில் உள்ள எனது வீட்டில் நான் வாழ அனுமதி மறுப்பது எனது அடிப்படை உரிமையை மீறும செயல்.
- நாடாளுமன்ற உறுப்பினராகிய எனது கடமையை நிறைவேற்ற இது தடையாக உள்ளது.
- வளம் நிறைந்த, தொழில் வாய்ப்பு உள்ள பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மக்களை மீளக் குடியமர அனுமதிக்காதமை குறித்து பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருக்கு பல தடவைகள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு புலிகள் சந்திப்பு

கொழும்பு,டிசெ.5

தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

சந்திப்புக்கான திகதி இன்னும்

(18ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு இராணுவ ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய அரசு தயார்!

## அந்நாட்டின் முன்னாள் வெளிவிவகாரச் செயலர் கூறுகிறார்

இலங்கை மக்களின் தேவைக்கேற்ப இராணுவரீதியான ஒத்துழைப்பு உட்பட எந்த வகையான உதவியை வழங்குவதற்கும் இந்தியா தயாராக உள்ளது.

அதேவேளை, இலங்கையில் சட்ட விரோதமான கடற்படைபொன்று உருவாவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது.

- இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் எம்.என்.ராஜ்கோத்ரா தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை-இந்திய திட்ட உபாய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பகுதியில் சட்ட விரோதமான கடற்படையின் தொல்லைகளை ஒழித்துக்கட்டவேண்டும். இரு நாடுகளும் இணைந்து கூட்டாகக் கடற்படை பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்.

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் கைதுசெய்துள்ளனர். இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு இந்தியாவை ஆத்திரமூட்ட வேண்டாம் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நான்

(18ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலையில் நேற்று நண்பகல் புலிகளிடம் சரணடைந்த சிப்பாய்

முகமாலை,டிசெ.5

முகமாலை சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

இரத்தினபுரியைச் சேர்ந்த கே.எஸ். சரத்குமார (வயது - 21) என்ற சிப்பாயே இவ்வாறு சரணடைந்தவராவார்

நேற்று நண்பகல் 12 மணிக்கு முகமாலையிலுள்ள விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிக்குச் சென்ற இந்தச் சிப்பாய், தான் தனது சொந்த இடத்துக்குச் சென்று வாழ விரும்புவதாகவும், அதற்கு உதவுமாறும் கேட்டுள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் கிரனேட் வீச்சு இளைஞர் ஒருவர் பலி!

கொழும்பு,டிசெ.5

மூதூர் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் மூதூர் ஜாயா பள்ளி வாசலுக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் மூதூரைச் சேர்ந்த ரஹீம் அல்லது பாவா (வயது 30) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இதேவேளை -

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இடிமண் கிராமத்திற்கும், ஆலங்கேணி கிராமத்திற்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்தில்

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே நாடான இலங்கைக்கு இரண்டு கடற்படைகள் கூடாது


## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கடற்புலிகள் என்கின்ற பெயரில் கடற்படை அமைத்துவருவது இந்திய அரசுக்குத் தெரியும். ஒரே நாடான இலங்கைக்கு இரண்டு கடற்படைகள் கூடாது. இப்படிக் கூறியுள்ளார், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

விடுதலைப் புலிகளின் கடற்படை மன்னார் கடற்பகுதியில் தங்களது ஆளுமையை நிலைநிறுத்துவதைத் தடுக்க இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் இருநாட்டுக் கடற்படைகளும் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன என்றும் பெர்னாண்டஸ் கூறினார்.

(18ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கில் இயல்பு நிலை திரும்பவில்லை: பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் வலியுறுத்து!

## மனித நேய அமைப்பு தெரிவித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.5

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், இயல்பு வாழ்க்கை என்பது இதுவரை ஏற்படவில்லை -

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளிடம் யாழ் மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகத்தின் கொள்கை மற்றும் பாதுகாப்பு தொடர்பான உதவிப் பணிப்பாளர் கேணல் நிக் ஸிலிங்கர், பிரிட்டிஷ் உயர் துாதரகத்தைச் சேர்ந்த மார்க் வில்ரன், பரோவ் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். யாழ் குடாநாட்டு நிலைமைகளை ஆராயும் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இக் குழுவினர் மாலை 4மணியளவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் சந்திப்பொன்றை நடத்தினர். இச்சந்திப்பில் அருட்தந்தை சி.ஜெ. ஜெயக்குமார், மா.கா.ழவேந்தன் மற்றும் மாநகர முன்னாள் ஆணையாளர் சி.வீ. கே.சிவஞானம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டதாவது:

யாழ்ப்பாண மக்கள் மட்டுமன்றி அனைத்துத் தமிழ் மக்களும் அமைதியையும் சமாதானத்தையுமே வேண்டி நிற்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பெரும் எண்ணிக்கையான தமிழ மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர முடியாதவர்களாக உள்ளனர். உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினர் மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துள்ளனர். மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் எந்த மக்களுக்கும் பூரணமாக வழங்கப்படவில்லை. சுமார் 70வீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு அவை சிறுபகுதியேனும் வழங்கப்படவில்லை. யாழ் நகரில் உள்ள பெரும்பாலான வீதிகள் படையினரால போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளன. எமது மக்கள் அனைவரும் கண்ணியத்துடனான சமாதானத்தையே விரும்புகின்றனர். அதற்காக சர்வதேச சமூகததிடமிருந்து அழுத்தங்களையும் எதிர்பார்க்கின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து சுமார் இரண்டு வருடங்களாகின்ற நிலையிலும் மக்கள் வாழ்வில் இயல்பு நிலை திரும்பவில்லை - இவ்வாறு அங்கு தெரிவிக்கப்பட்டது. (எ-9)



அரச சார்பற்ற பிரதிநிதிகள் - பிரிட்டிஷ் அதிகாரிகள் சந்திப்பு.

# அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்த சிப்பாய்க்கு ரூ.1000 அபராதம்

தெல்லிப்பழை,டிசெ.5

சுன்னாகம் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு வீடொன்றினுள் அத்துமீறி பிரவேசித்த குற்றத்துக்காக இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்று ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கேஎம் லலித் சுஜீவ பண்டார என்ற சிப்பாய்க்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம், கந்தரோடை வீதி இராணுவ காவலரணில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் ஒருவர் நள்ளிரவில் அயலிலுள்ள வீடொன்றுக்குள் சிவிலுடையில் புகுந்துள்ளார். அவரைப் பிடிக்க முயன்றவர்களையும் தாக்கினார் என்று சுன்னாகம் பொலீஸாரால் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவரை இராணுவப் பொலீஸாரின் பாதுகாப்பில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று இந்த முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது. நீதிவான் சரோஜினி இளங்கோவன் சம்பந்தப்பட்ட சிப்பாய்க்கு ஆயிரம் ரூபா அரச செலவு அபராதம் விதித்தார். (ம-150)

# ஏ-9 வீதி பல இடங்களில் மோசமாகச் சேதம்!

## போக்குவரத்தில் படு சிரமம்

சாவகச்சேரி,டிசெ.5

ஏ-9 வீதியில் கொடிகாமத்துக்கும் கைதடிக்கும் இடைப்பட்ட பகுதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

தென் பகுதிக்கான போக்குவரத்து ஏ-9 பாதை ஊடாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஏ-9 வீதியில் வாகனங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில் ஏ-9 வீதி பல இடங்களிலும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. அதிலும் தற்போது பெய்து வரும் மழையால் சேதமடைந்த வீதிகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களில் வெள்ள நீர் தேங்குவதால் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

ஏ-9 வீதியில் புத்தூர்ச் சந்தி, இராமாவில் பகுதி, மீசாலை பழைய புகையிரத நிலையச்சந்தி ,சங்கத்தானை முதல் சாவகச்சேரி வேம்படிச் சந்தி வரையிலான பகுதி, நுணாவில் - கல்வடி ஆகிய இடங்களில் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

எனவே இவ்வீதியை செப்பனிட உரிய திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள எதிர்பார்க்கிறார்கள். (ஒ-31)

## திருகோணமலை, கிண்ணியா பிரதேசங்களிலிருந்து

# இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம்: 46 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியது!

கிண்ணியா,டிசெ.5

"அண்மைக்கால அசம்பாவிதங்களால் திருகோணமலை, கிண்ணியா பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க திறைசேரியிலிருந்து 46 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவுகள் மற்றும் ஏனைய பொருள்களை வழங்க 25லட்சம் ரூபா தேவை என்று திருகோணமலை அரச அதிபர் தலைமையிலான கூட்டத்தில் முன்னர் தீர்மானிக்கப்பட்டு அரசிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

தற்போது, பிரதமரின் விசேட பணிப்பின் பேரில் இந்தக் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பிரதமர், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரிடம் திசர் தௌபீக் எம்.பி விடுத்த வேண்டுகோளின்படி, கிண்ணியாப்பகுதியில் உள்ள ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த 2 ஆயிரத்து 854 குடும்பங்களுக்கு 3 நாள்களுக்கு சமைத்த உணவும் இரண்டு வாரங்களுக்கு உலர் உணவும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமைத்த உணவு வழங்க நாள் ஒன்றுக்கு,12வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு 45ரூபாவும், 12வயதுக்கு குறைந்த ஒருவருக்கு 25ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க -

திருகோணமலை மற்றும் கிண்ணியாப் பகுதிகளில் மேலதிக இராணுவத்தினரும் பொலீஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை நகரின் ஏகாம்பரம் வீதி, மத்திய வீதி, கடற்படைத்தள வீதி போன்ற மக்களின் நடமாட்டம் கூடியபகுதிகளில் இராணுவத்தினர் பொலீஸாருடன் இணைந்து ரோந்து நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலும் பொலீஸாரும் இராணுவத்தினரும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ)

# சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க ஜப்பான் அரசாங்கம் வலியுறுத்து

கொழும்பு,டிசெ.5

தேக்க நிலையிலுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதில் இலங்கை அரசின் பங்கு முக்கியமானது. எனவே, நாட்டில் தற்போது நிலவுகின்ற அரசியல் முரண்பாடுகளை உடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

- இவ்வாறு ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஜோறிக்கோ காவகுச்சி அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் தற்போதைய அரசியல் முரண்பாடுகளை ஜப்பான் கூர்ந்து அவதானித்து வருகிறது.

சமாதான முயற்சிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. டோக்கியோ உதவும் நாடுகளின் மாநாட்டின் பங்காளித்தரப்பு என்ற ரீதியில் தற்போது இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடைபெற்று வரும் அதிகாரமட்டப் பேச்சுக்கள் பயனுள்ளவையாக அமைய வேண்டும் என ஜப்பான் விரும்புகின்றது.

அந்த வகையில், இலங்கையில் தற்போது காணப்படும் அரசியல் முரண்பாடுகள் களையப்பட்டு சமாதான முயற்சிகள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என ஜப்பானிய அரசு உறுதியாக நம்புகிறது.

இதேவேளை, புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதையிட்டு ஜப்பானிய அரசு மகிழ்ச்சியடைகின்றது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காரைநகர் ஆலயத் தீர்த்தக்கரை புனரமைப்புக்கு முட்டுக்கட்டை

## மக்கள் போராட்டம் காரணம்

காரைநகர் சிவன் கோயிலின் புனித் தீர்த்தக்கரையை புனரமைப்பதற்கான ஆரம்ப வைபவம் அங்கு நடந்த எதிர்ப்புப் போராட்டத்தால் கைவிடப்பட்டது. காரைநகர் சிவன் கோயில் ஆலய தீர்த்தோற்சவம் 'கசூரினா' கடற்கரையில் நடப்பது வழக்கம். இதற்காக அமைக்கப்பட்ட மண்டபம் சேதமடைந்துள்ளது. அந்த மண்டபம் உள்ள புனித் தீர்த்தக்கரையை புனருத்தாரணம் செய்தல், அந்தப் பிரதேசத்தை புனித பிரதேசமாக அங்குரார்ப்பணம் செய்தல் ஆகிய நிகழ்வுகள் காரைநகர் சிவன் ஆலய அடியார்கள் சபை என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளை நடத்த மேற்படி சபையினர் வாகனம் ஒன்றில் காரைநகர் 'கசூரினா' கடற்கரைக்கு நேற்று வந்திருந்தனர். அப்போது அங்கு திரண்ட உள்ளூர் மக்கள் நிகழ்வுகளை நடத்தவிடாது மறியல் போராட்டம் நடத்தினர்.

இந்தப்பணிகளை ஆலய ஆதீனகர்த்தாக்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் -

ஆலயத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் -

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

முன்னதாக உள்ளூர் மக்கள் ஆலய முன்றிலில் இருந்து காலை 8 மணிக்கு பேரணியாக 'கசூரினா' கடற்கரைக்கு வந்தனர். அவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் சென்ற பேரணியினர் நிகழ்வைத் தடுக்கும் வகையில் அங்கு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நிகழ்வை நடத்த வந்தவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச்சென்றனர். கொழும்பில் உள்ள சிலர் அடியார்கள் சபை என்ற பெயரில் இயங்கி வருகின்றனர் என்றும் - அத்தகையோரே நேற்று நிகழ்வை நடத்த வந்திருந்தனர் என்றும் கூறப்பட்டது. (ஓ-3-73)

# மத்திய - மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரம் பகிரப்பட்டிருப்பது எவ்வாறு?

## இந்தியாவில் மு.கா. அரசமைப்புக்குழு ஆராய்வு

இந்தியாவின் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையில் அரசமைப்பில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தாதவாறு - இனங்களின் தேவையைப் பொறுத்து அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பது எவ்வாறு என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் அங்கு சென்றுள்ள கட்சியின் அரசமைப்புக்குழுவினர் ஆராய்ந்ததோடு, நேரில் கண்டறிந்தனர்.

அமைச்சர் ஹக்கீமும் குழுவினரும் டார்ஜிலிங்கிலுள்ள கவுன்ஸிலின் பிரதம செயலாளர் தொம்லோ, அதன் டில்லி வதிவிடப் பிரதிநிதி மேஜர் கவுசல் ஆகியோரை சந்தித்துப் பேசினர்.

மேற்கு வங்காள மாநிலத்தில் டார்ஜிலிங் மலைப் பிரதேசத்திலுள்ள 2ஆயிரத்து 600 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஒரு பிரதேசத்தில் - அங்கு சிறுபான்மையினராக வாழும் - கூர்க்கா இனத்தவருக்கு மாநில அரசினால் எவ்வாறு அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

ஒன்பது லட்சம் சனத்தொகையைக் கொண்ட கூர்க்கா இனத்தவர் கடந்த பதினைந்தாண்டுகாலப் பகுதியில் பெற்றுக்கொண்ட அரசியல் அனுபவங்களை அவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் மட்டத் தூதுக்குழுவினருக்கு எடுத்து விளக்கினர்.

இந்திய உப கண்டத்திலுள்ள வேறு சில மாநில அரசுகளின் மேலாண்மைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அங்கு வாழும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வு முறையுடன் கூர்க்கா இனத்தவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஒப்பு நோக்கி ஆராயப்பட்டன.

டார்ஜிலிங் கவுன்ஸில் மற்றும் லடாக் பிரதேசத்திலுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பான பல ஆவணங்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசமைப்புக் குழுவினர் புதுடில்லி வந்து சேர்ந்தவுடனேயே விமான நிலையத்தில் வைத்து அவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசமைப்புக் குழுவினர் லடாக் பிரதேசத்தின் அரசமைப்புப் பற்றி ஆராய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால், மத்திய அரசு கப்பல்துறை அமைச்சர் சத்ருகன் சின்ஹா ஆகியோரையும் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

தமது இந்திய விஜயம் பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம்,

தாய் நாட்டில் நடக்கும் முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகள் அடிக்கடி மன நிம்மதியை குலைத்த போதிலும், சமூகத்தின் நிரந்தர விமோசனம் கருதி மேற்கொண்டுள்ள இப்பயணம், பிரிட்டன், வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய இடங்களுக்கு சென்றிருந்தபோது பெற்ற அனுபவங்களைப் போன்றே முஸ்லிம்கள் தரப்பிலான தீர்வு முன்மொழிவுகளுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். (எ)

# சிஹல உறுமய கட்சியினர் கிண்ணியாவுக்கு இன்று விஜயம்

சிஹல உறுமய கட்சியினர் இன்று கிண்ணியா சூரன்கல் பிரதேசத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

கிண்ணியாவில் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் அகதி முகாம்களில் உள்ள மக்களுடன் கலந்துரையாடுவதற்குமே தாம் அங்கு செல்லவுள்ளனர் என்று உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

'புலிகளினால் இந்தப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயவே நாம் சூரன்கல் பிரதேசத்துக்கு விஜயம் செய்கின்றோம்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)



பிலிப்பைன்ஸ் நாட்டில் தீவிரவாத வன்முறைகள் அதிகரித்துள்ளன. இதனால் அந்நாட்டில் சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைந்து விட்டது. ஆகவே வெளிநாட்டுப் பயணிகளை கவர்வதற்காக பிலிப்பைன்ஸ் அரசு பலவித நிகழ்ச்சிகளை நடத்த ஆரம்பித்துள்ளது.

அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் பன்றி பிடிக்கும் போட்டி. இதில் பன்றி மீது எண்ணெயை பூசிவிடுவார்கள். எண்ணெய் வழுக்க வழுக்க பன்றியை விரட்டிப்பிடிக்க வேண்டும். பன்றி பிடிக்கும் போட்டி ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

# இந்திய சட்டசபைத் தேர்தல்களில் பா.ஜ.கட்சிக்கு அமோக வெற்றி!

புதுடில்லி, டிசெ.5

இந்தியாவில் நடந்துமுடிந்து நான்கு மாநிலங்களுக்கான சட்டசபைத்தேர்தல் களில் பா.ஜ.க.அமோக வெற்றியீட்டியது. புதுடில்லியைக் காங்கிரஸ் தக்கவைத்துக்கொண்டது.

கடந்த முதலாம் திகதி நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வசமிருந்த மத்திய பிரதேசத்தையும், ராஜஸ்தானையும் பா.ஜ. கட்சி கைப்பற்றியது.

ராஜஸ்தானில்-பா.ஜ.க117 ஆசனங்களையும்,காங்கிரஸ் 17ஆசனங்களையும்,மத்திய பிரதேசத்தில்-பா.ஜ.க 177 ஆசனங்களையும், காங்கிரஸ் 36 ஆசனங்களையும்,சதீஸ்கரில்-பா.ஜ.க 57ஆசனங்களையும,காங்கிரஸ் 28 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

புதுடில்லியில் காங்கிரஸ் 50ஆசனங்களைப் பெற்று தொடர்ந்து இந்த மாநில ஆட்சியை தனதாக்கிக் கொண்டது. புதுடில்லியில் பா.ஜ.க. 17ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது.

"உலக அளவில் புதுடில்லியை சிறந்த நகரங்களில் ஒன்றாக உருவாக்கப் பாடுபடுவேன்" - என்று வெற்றிபெற்றதன் பின் புதுடில்லி முதல்வர் ஷீலா தீட்சித் தெரிவித்தார். அத்துடன் இத்தேர்தலில் எதிர்க் கட்சிகள் மிகவும் கேவலமான முறையில் பிரசாரம் செய்தன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

புதுடில்லியில் பா.ஜ.க. தோல்வியடைந்தாலும் அரசியலை விட்டு விலகமாட்டேன் என்று பா.ஜ.க. முதலமைச்சர் வேட்பாளரும்,முன்னாள் முதலமைச்சருமான மதன்லால் கூறியுள்ளார்.

மத்திய பிரதேசத்தில் உமா பாரதி புதிய முதலமைச்சராகப் பதவியேற்பார். இங்கு பா.ஜ.க. தனிப பெரும் பான்மைப் பலம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ராஜஸ்தானில் வசுந்தரா ராஜே முதலமைச்சராகப் பதவியேற்பார்.

நேற்றுக்காலை ஆரம்பமாகிய வாக்கு எண்ணிக்கை நேற்றுமாலை வரை நீடித்தது. மின்னனு இயந்திரங்களில் வாக்குப்பதிவு நடந்ததால் வாக்கு எண்ணிக்கை மிக வேகமாக நடந்தது. வாக்கு எண்ணிக்கை தொடங்கிய முப்பது நிமிடங்களுககுள் முன்னணி நிலைவரம் தெரிந்தது.

தேர்தல் முடிவுகள் குறித்து பிரதமர் வாஜ்பாய் நேற்றுமாலை பா.ஜ.க.தலைவா வெங்கையா நாயுடு, துணைப்பிரதமர் அத்வானி ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.



பாரதீய ஜனதா கட்சியின் வெற்றியை கொண்டாடுகிறார் இந்தியப் பிரதமர்.

# பொதுநலவாய நாடுகளின் மாநாடு நைஜீரியாவில் நேற்று ஆரம்பம்

அபுஜா, டிசெ.5

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நைஜீரியாவில் நேற்று ஆரம்பமாகியது, எலிசபெத் மகாராணி மாநாட்டை ஆரம்பித்துவைத்தார். தலைநகர் அபுஜாவில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிய முதல்நாள் நிகழ்வில் 2ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். நாடில் எடுக்கப்படும் முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பதற்காக அங்கு 700 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் குவிந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளின பொதுவான பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக எலிசபெத் மகாராணி நேற்று முன்தினம் தலைநகர் அபுஜாவுக்குச் சென்றார். தனது கணவருடன் நைஜீரியாவுக்கு முதற்றடவையாகச் சென்ற மகாராணிக்கு பத்தாயிரம் நைஜீரியப் பொலீஸார் பாதுகாப்பு வழங்கினர். நைஜீரிய ஜனாதிபதி ஒலுசன் ஒபசன்ஜோவையும், அந்நாட்டு உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ள மகாராணி, அங்குள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளுடனும் பேச்சு நடத்துவார். முக்கியமாக பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்கவுள்ள அவர், மேற்படி நாடுகளின் தூதுவர்களையும் தனித் தனியாக சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை தலைநகர் அபுஜாவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் மாகாராணிக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இராணுவ அணிவகுப்பு மரியாதையை அங்கு அவர் ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி ஒபசன்யோ மற்றும் பிரிட்டிஷ் தூதுவர் ஆகியோர் மகாராணியை விமானநிலையத்தில் வரவேற்றனர். அங்கு நைஜீரிய வெளியுறவு அமைச்சரும் பிரசன்னமாகி இருந்தார். அங்குள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் மகாராணி தற்போது தங்கியுள்ளார். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்க வரும் வெளிநாட்டவர்களைக் குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால் பாதுகாப்புப்பலப்படுத்தப் பட்டுள்ளது.

மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான ஆயுதம் ஏந்திய பொலீஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மகாராணி பயணிக்கும் வீதிகளில் கடும் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.



பிரிட்டிஷ் மகாராணிக்கு நைஜீரியப் படையினர் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

# ஐ.நா. மனித உரிமை விருதுகள்

ஐ.நா. சபை வழங்கும் மனித உரிமை சேவைக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சீன நாட்டுச் சட்டத்தரணி ஒருவரும், அகதிகளுக்காக பாடுபட்ட காலஞ்சென்ற ஐ.நா. தூதுவர் ஒருவரும் இந்த விருதுகளைப் பெறத் தெரிவாகியுள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க மகளிர் அமைப்பு, உள்நாட்டுக் கலவரத்தை எதிர்த்துப் போராடிய ஜோர்தானியக் குழு ஆகியனவும் விருதுகளைப் பெறுவதற்கு தெரிவாகியுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி நியூ யோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் விருதுகள் வழங்கும் விழா இடம்பெறும. ஐ.நா. பொதுச்சபையின் தலைவரும் விருதுகளுக்கான தேர்வுக்குழுவின் தலைவருமான ஜூலியன் கெனடி விருதுகளை வழங்குவார்.

விருது பெறும் சீன சட்டத்தரணி டெங்குவாங் உடலூனமுற்றோருக்காகப் பாடுபட்டவர். இவர் முன்னாள் சீன ஜனாதிபதி டெங்சியோ பெங்கின் மகனாவார். 1968 ஆம் ஆண்டு சீனாவில் இடம்பெற்ற வன்முறை மற்றும் கலாசார புரட்சியின் போது ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்ட இவர் அதிலிருந்து சீனா மற்றும் உலகெங்கிலும் உள்ள ஊன முற்றோருக்காகப்பாடுபட்டார்.

1988 ஆம் ஆண்டு சீனாவில் ஊன முற்றோருக்கான கூட்டமைப்பையும் இவர் ஏற்படுத்தியிருந்தார். இந்தக் கூட்டமைப்பின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து இரண்டு கோடி மக்கள் இன்னும் உதவி பெற்றுவருகின்றனர்.

# மனிதப் படுகொலைக்குத் தூண்டிய ஊடகவியலாளருக்குத் தண்டனை!

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கொடூர மனிதப் படுகொலைகளை நடத்தத் தூண்டிய ஊடகவியலாளர் மூவரும தமக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்பவுள்ளனர். 1994 ஆம் ஆண்டு கொடூர மனிதப் படுகொலைகளை நடத்தத் தூண்டிய இருவருக்கு ஆயுள் தண்டனையும் மற்றொருவருக்கு 35ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

வானொலி நிலையம் ஒன்றை நடத்திய இருவரும், பத்திரிகை ஒன்றை நடத்தியவரும் 'குர்சி' இனத்தவரைப் படுகொலை செய்வதற்குத் தூண்டினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை தான்சானியாவில் இயங்கும் ஆபிரிக்க நாடுகளுக்கான சர்வதேச நடுவர் மன்றில் நடந்தது. இதன் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. வானொலி நிலையத்தை இயக்கிய இருவரும் 'குர்சி' இனத்தவர் மீது வெறுப்பைத் தூண்டும் வகையில் நடந்து கொண்டனர். "குர்சி இனத்தவரை கரப்பான் பூச்சிகள் என்றும், அவர்கள். சவக் குழிகளுக்குள் போடப்பட வேண்டியவர்கள் என்றும், சவக்குழி இன்னும் நிரமபவில்லை; மேலும் கொன்று குவியுங்கள்"

- என்றும் இவர்கள் தெரிவித்திருந்தனர்.

இவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. பத்திரிகையை நடத்தி அதன் மூலம் குர்சி இனத்தவர்கள் மீது வெறுப்பைத் தூண்டியவருக்கு 35 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைத் தீர்ப்பு மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் கூறப்பட்டது.

# பின்லேடனை இழிவுபடுத்திய சிறை அதிகாரி பணி நீக்கம்!

ஒஸாமா பின்லேடனை இழிவுபடுத்தும் வகையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் லண்டனில் சிறை அதிகாரி ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

கொலின்ரோஸ் (வயது 53) என்பவர் 21 ஆண்டுகளாக மேற்படி சிறையில் அதிகாரியாகப் பணிபுரிந்தார். சம்பவ தினத்தன்று சிறை வளாகத்தின் வாயிலில் ஒட்டப்பட்டிருந்த பின்லேடனின் படத்தை நோக்கி தனது கையிலிருந்த சாவிக் கொத்தை அவர் எறிந்தார். அச்சமயம், முஸ்லிம்கள் மூவர் சிறைக்குள் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் மேற்படி விடயத்தை சர்ச்சையாக்கினர்.

அதனையடுத்து பின்லேடனை இழிவுபடுத்திய குற்றத்திற்காக இவர் பணி நீக்கம் செய்யப்பட்டார். இதனை லண்டனில் இருந்து வெளியாகும் 'த டெயிலி டெலி கிராப்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# குடித்துவிட்டுக் கலாட்டா செய்த கறுப்பர் அமெ.பொலீஸாரால் அடித்துக் கொலை!

வாஷிங்ரன், டிசெ.5.

அமெரிக்காவில் மதுபானம் குடித்துவிட்டுக் கலாட்டா செய்த கறுப்பினத்தவர் ஒருவரைப் பொலீஸார் அடித்துக் கொன்றனர்.

ஒகியோ மாகாணத்தில் உள்ள சின்சினாட்டி என்ற நகரத்தில் இச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது. அங்குள்ள ஹோட்டலில் மதுபானம் குடித்துவிட்டு இவர் கலாட்டா செய்தார்.

ஹோட்டலில் வேலை செய்யும் பெண் இவரது நடத்தைகுறித்துப் பொலீஸாருக்கு அறிவித்தார். பொலீஸார் அவ்விடத்திற்கு வந்தனர். பொலீஸாரிடமும் அவர் கலாட்டா செய்தார். ஒரு கட்டத்தில் கோபமடைந்த பொலீஸார் அவரை அடிக்க ஆரம்பித்தனர்.

இரும்புக்கம்பிகள்,பொல்லுகளால் இவரைப்பொலீஸார் தாக்கினர். மயங்கிவிழுந்த அவரைப் அப்படியே விட்டு விட்டு அங்கிருந்து பொலீஸார் நகர்ந்து விட்டனர்.

இதனையடுத்து அங்கு வந்த மருத்துவமனை ஊழியர்கள் அவரைத் தூக்கிச் சென்றனர். ஆனால், மருத்துவமனைக்குச் கொண்டு சென்ற சில நிமிடங்களிலேயே அவர் பரிதாபமாக இறந்தார்.

பொலீஸார் இவரை அடித்த காட்சிகள் பொலீஸ்வாகனத்தில் இருந்த வீடியோவில் பதிவாகியுள்ளன. அது தெரியாமல் பொலீஸார் இவரை அடித்துள்ளனர்.

இந்த வீடியோ காட்சிகள் தற்போது பொலீஸாருக்கு வேட்டு வைக்கும் அளவுக்குச்சென்றுள்ளது. இந்த வீடியோ காட்சிகளைக் கைப்பற்றிய உயர் பொலீஸ் அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜோன்ஸ் (வயது41) என்ற இந்த கறுப்பினத்தவர் பொலீஸாரால் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவத்தை அங்குள்ள மனிதஉரிமை அமைப்புக்கள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

இதற்கு முன்னரும் இதேபோன்று கறுப்பினத்தவர் ஒருவரைப் பொலீஸார் அடித்துக்கொன்றதால் அங்கு மூன்று நாள்கள் வரை கலவரம் நடந்தது.

தற்போது நடந்துள்ள சம்பவத்தையடுத்து மீண்டும் அங்கு கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக மேலதிகப் பொலீஸார் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட ஜோன்ஸின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கவேண்டும் என்று அங்குள்ள கறுப்பினத்தவர்கள ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர்.

# அமெ. பாதுகாப்பு அமைச்சர் ஆப்கானுக்குத் திடீர் விஜயம்

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்று ஆப்கானிஸ்தானிற்குத் திடீர் விஜயம் மேற்கொண்டார். ஜனாதிபதி ஹமீத் ஹர்சாயைச் சந்தித்த அவர் ஆப்கான் தேர்தல் குறித்தும் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்தினார். அங்குள்ள அமெரிக்கப்படையினரில் ஒரு பகுதியினரை ஈராக்கிற்கு நகர்த்துவது குறித்தும் அவர் அங்கு ஆலோசனை நடத்தினார்.

தலிபான்களின் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவது குறித்து ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ள இந்நிலையில், ரம்ஸ்பீல்டின் ஆப்கான் விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அங்குள்ள அமெரிக்கப்படைத்தளத்தில் நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் தரையிறங்கிய ரம்ஸ்பீல்ட் நேற்றுமாலை அங்கிருந்து புறப்படவிருந்தார்.

(ஓ)

## விசேட ஆங்கில வகுப்புகள்

வடமராட்சி,டிசெ.5

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கிலத்தில் அடைவு மிகவும் குறைவான 6ஆம், 7ஆம் தர மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்புக்களை நடத்துவதென பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்துக்கான அனுமதி வடமராட்சி கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து வகுப்புகளை நடத்துவதற்கு ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கல்லூரியால் கோரப்பட்டுள்ளது.(ம-173)

## குடத்தனையில் வெள்ளத்தால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அங்கு இடம்பெயர்ந்தவர்களுக்கென அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதி வீடுகளிற்குள் வெள்ளம் ஏறியதால் அக்குடியிருப்பு வாசிகளில் பலர் அங்கிருந்தும் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் சிலர் தங்குமிட வசதியின்றி அயலில் உள்ள சில வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (ம-15)

## விளையாட்டு கழகங்கள் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.5

வலி.வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தடகள குழு நிலை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் கழகங்களில் இது வரை பதிவுசெய்யப்படாத கழகங்களும் -

அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும் கழகங்களும் தமது கழகப பதிவுகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளலாம் என்றும் - இதற்குப் பின் கழகப் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் - பிரதேச செயலர் க.குணராசா அறிவித்துள்ளார். (எ)

## சுழற்சிமுறைக் கடன்கள்

தென்மராட்சி,டிசெ.5

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினர் (யு.என்.டி.பி) சுழற்சி முறைக் கடன்களை விரைவில் வழங்கவுள்ளனர்.

இக் கடன்களை வழங்குவது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 14ஆம் திகதி சங்க மண்டபத்தில் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் சகல கிளைகளில் இருந்தும் தலைவர், செயலாளர் மற்றும் ஓர் அங்கத்தவர் ஆகிய மூவரைக கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (ம-117)


**GREEN CARDS**

**அமெரிக்கா லொத்தர் - VISA**

அமெரிக்கா செல்லும் அதிஷ்ட வாய்ப்பு

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

**SRI MURUGAN**
Computer Systems
Communication
Services & Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 2670 . Fax: 021 222 3214
E-Mail-del- smskn @ evreka.lk.

**THIRUMURUGAN COM NET,**
Computer Systems Communications
Services,
46, Adiyapatham Rd.
Thirunelvely,
Tel:021 222 7310.
Fax: 021 222 7310.



## ஆங்கில ஆசிரியர் தேவை

பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கிலப் பாடம் கற்பிப்பதற்கு ஆற்றலும், அனுபவமும் மிக்க ஆசிரியர் தேவை. சுயவிவரங்களுடனும், பொருத்தமான ஆவணங்களின் ஒளிப் படப் பிரதிகளுடனும் விண்ணப்பம் 18.12.2003ஆம் திகதிக்குப் பிந் தாமல் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி-31683)(35-21-16) அதிபர், ஹாட்லிக்கல்லூரி.


## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது அறங்காவலர் சபை
உறுப்பினர்
**திரு.சதானந்தன் கேசவானந்தன்**



அவர்கள் 03.11.2003 அன்று யாழ். மாவட்ட சாவகச்சேரி நீதிமன்றின் நீதிவான் உயர்திரு. பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணஞ் செய்து கொண்டார். இவர் கற்கோவளை வீரபத்திரர் ஆலயத் தலைவராவார். அத்துடன், இலங்கை மின்சாரசபை ஊழியருமாவார். இவரின் சமூக சேவை மேன்மேலும் வளர்ந்து பல்லாண்டு சேவையாற்ற வல்லிபுர மாயவனை வேண்டுகின்றோம்.

துன்னாலை வடக்கு,
புலோலி.

அறங்காவலர் சபை
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.

(C/31689) (35-16-21)


**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத் தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)


## வாழ்த்துகின்றோம்



இன்று (05. 12. 2003)
பவளவிழாவினைக் கொண்டாடும்

திரு. திருமதி
**சண்முகநாதன் தையல்நாயகி**

*தம்பதிகளை*
*பல்லாண்டுகாலம் பார்போற்றும்*
*தம்பதிகளாக வாழ*
*அன்புடன் வாழ்த்துகின்றோம்.*

பாசமிகு பிள்ளைகளான:
நிர்மலநாதன் (சுவிஸ்), கமலநாதன், சிவநாதன்,
நிர்மலநாயகி, யோகநாயகி,
மருமக்கள்: சந்திரா, யோகம்,
பேரன்: நேத்தன் மற்றும்
சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(25352) (25)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## சிவகஜசர்மா

புங்குடுதீவு, மதுரையம்பதி சிவன் தேவஸ்தான ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் லோகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் பேரனும், அருணோதயக்குருக்கள் - சுபாஜினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வருமான *சிவகஜசர்மா* தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05. 12. 2003) வெள்ளிக்கிழமை விமர்சையாக புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்திலுள்ள தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை தாத்தாமார், அம்மம்மாமார், மாமன்மார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிரும் சிறப்புமாய் மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரப்பெருமான் திருவருள் பெற்றுவாழ அன்புடன் வாழ்த்துகின்றனர்.

சிவன்கோவில், 3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

அருணோதயக்
குருக்கள்.

(25363) UTHAYAN Graphics

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
06
-
09
-
1976



உதிர்வு
07
-
09
-
2003

## திருமதி பத்மநாதன் மாலினி

அன்புடன் வளர்த்த எம்மைத் தவிக்க விட்டு
பாசம் கொண்ட பிள்ளைகளைத் தவிக்கவிட்டு
நண்பர்கள், உறவுகளை கதிகலங்க வைத்து
உறங்கி விட்டதேனோ?

இன்று (05.12.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (25435)(25-16-21)

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
தனபாலசிங்கம் குடும்பத்தினர்.

## கனடாவில் அணைந்த தீபத்திற்கு

## இதய அஞ்சலிகள்

முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர்
அமரர் **S.T.சாரி** அவர்களின் பாரியார்

## திருமதி அலமேலு

அவர்கள் பரமபதம் அடைந்ததையிட்டு எமது இதய அஞ்சலிகள். அன்னாரின் ஆத்மா அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம். அவரின் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம்.

மானிப்பாய்.

பாலகிருஸ்ணன் குடும்பம்,
சிதம்பர நடராஜா குடும்பம்,
மண்டலநாயகம் குடும்பம்,
சுப்பையாபிள்ளை குடும்பம்.

(25396)(34-21-16)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



கர்த்தருக்குள் நித்திரை அடைந்த
**சண்முகம் பாலமுரளிதரன்**
(யா/ஹாட்லிக் கல்லூரி வர்த்தகப் பிரிவு)

அன்னையிடம்:
1985-04-16

கர்த்தரிடம்:
2002-12-05

*இலட்சிய வாதியாய் இயற்கை தொடர்ந்திருந்தாய்*
*புரட்சியவாதியாய் கல்வியைத் தொடர்ந்தாய்*
*கர்த்தரின் செல்வனாய் வேதாகமத்தை வெற்றி கொண்டாய்*
*விண்ணதிர வைத்த நீ வேதனையை ஏன் தந்தாய்?*

- குடும்பத்தினர்.

தும்பளை.

(25511) (25-21-16)

உதயன்

# பரவும் இனவாதத் தீ

*"சமாதானத்தின் எதிரிகள் - அதாவது சமாதானத்துக்குத் தடையாக இருப்பவர்கள் - புலிகள் அல்லர்; பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகளின் தலைவர்கள்தான். அவர்களுடைய ஆட்சி அதிகார மோதல்களுக்கும் போட்டாபோட்டிகளுக்கும் தமிழ்மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர்."*

- இப்படி நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன்.

சிங்கள ஆட்சித் தலைவர்களின் மோதல்களும் அதிகாரப் போட்டாபோட்டிகளும் ஓயாதவரை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நிரந்தர சமாதானத்தை எட்டமுடியாதென்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சிங்களத் தலைவர்கள் ஆட்சியதிகாரத்துக்காகப் போட்டியிடுவது தப்பல்ல; அரசியல்வாதிகளின் இலக்கும் எண்ணமும் ஆட்சி அதிகாரமும் பதவிக் கதிரையும் தானே! எனவே, அதற்காக அவர்கள் மல்லுக்கட்டி நிற்பது ஒன்றும் பிழையல்ல.

ஆனால், ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காகப் போட்டி போட்டுக்கொண்டு இனவாதத்தைக் கிளப்புவதும், சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கும் - அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் - நடவடிக்கைகள் மூலம் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்று அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற விளைவதுமே தப்பானவையாகும்.

காலங்காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் செய்து வந்தது இதைத்தான்.

சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் மக்களை அடக்கி, ஒடுக்குவதில் விஞ்சி நிற்பவர் யார் என்ற போட்டியை சிங்கள மக்கள் முன்னால் ஏற்படுத்தி, அதனை மேடையேற்றி, அந்த நாடகத்தில் தீவிரமான நடிகர்களாகத் தங்களை அடையாளம் காட்டுவதன் மூலம் பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் 'அப்ளாஸ்' வாங்கி, ஆதரவு பெற்று, ஆட்சி பீடமேற வழிசமைத்துக் கொள்வதே தேசியத் தலைவர்கள் என்று கூறப்படும் சிங்களத் தலைவர்களின் பாணியாகவும் போக்காகவும் இதுவரை காலமும் இருந்து வந்தது.

இந்த நாடகப் போட்டியின் பார்வையாளர்களாகச் சிங்கள மக்களைத் திரட்டுவதற்காக - இந்த நாடகத்தின் மீது பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கு விருப்பும் ஈடுபாடும் வரச்செய்வதற்காக - அவர்களுக்கு இனவாத உரு ஏற்ற வேண்டியிருந்தது. அதையும் கனகச்சிதமாகச் சிங்களத் தலைவர்கள் புரிந்தனர்; புரிந்துகொண்டிருக்கின்றனர்.

தாம் வளர்த்துவிட்ட இனவாதத் தீயில் இப்போது நன்கு குளிர்காய்ந்துகொண்டிருக்கின்றார்கள் அவர்கள். இதையே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது பிந்திய மாவீரர் தின உரையிலும் சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

"...இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகின்றது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிப் பீடம் ஏறும் இருபெரும் சிங்கள அரசியல் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குநர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக் காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை. தற்போது கொழும்பில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்தமான நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான்.

"தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்தச் சதுரங்க விளையாட்டின் எதிர் விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன; எத்தனையோ பேச்சுகள் முறிந்து போயின; எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன; எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப் போயின. இதனால்தான் தமிழரின் பிரச்சினை, தீர்வின்றித் தொடர்கின்றது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கின்றது."

- இப்படித் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியதை நாடாளுமன்றத்தில் மீண்டும் ஒரு தடவை வழிமொழிந்திருக்கின்றார் சம்பந்தன் எம்.பி.

"இன்று நாட்டில் ஏற்பட்டிருப்பது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான மோதல்கள் அல்ல. பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பிரச்சினையும் அதிகாரப் போட்டிகளுமே. அவர்களுடைய மோதல்களுக்கும் அதிகாரப் போட்டிகளுக்கும் தமிழர்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர்" - என்றும் சம்பந்தன் கூறுகின்றார்.

சிங்களத் தலைவர்கள் தாங்கள் அரசியலில் குளிர்காய இதுகாறும் மூட்டி வளர்த்த தீ, இப்போது கனன்று தீப்பிழம்பாய் விளாசி எரிகின்றது. இதை அணைப்பதும் தணிப்பதும் அவர்கள் கைகளில்தான் உள்ளது. தவறினால் அன்று இலங்கையில் அனுமான் இட்ட தீ போன்றே இதுவும் ஆகிவிடும்.

# மூச்சுத் திணறல், காய்ச்சல் அறிகுறிகளுடன் 5 குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி!

## ஜப்பான் மூளைக்காய்ச்சல் தடுப்புமருந்து காரணமா?

யாழ்ப்பாணம்,டிசெ.5

திடீரென ஏற்பட்ட மூச்சுத் திணறல், காய்ச்சல் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகளுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தை ஒன்று கடந்த வாரம் உயிரிழந்துள்ளது.

ஜப்பான் மூளைக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தை ஏற்றிய பின்னரே குழந்தைகளுக்கு இத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டன என்று பெற்றோரால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதை அடுத்து இது தொடர்பான ஆய்வுகளை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொண்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஜப்பான் மூளைக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட குழந்தைகளில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த குழந்தையொன்றே மருந்து ஏற்றிய 24 மணி நேரத்தின்பின் உயிரிழந்தது. முதலில் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டது. 6 மணி நேரத்தின் பின்னர் சிகிச்சை பயனளிக்காமல் அது உயிரிழந்தது.

சித்தன்கேணியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சஞ்சீவன் (வயது1) என்ற குழந்தையே கடந்த முதலாம் திகதியன்று இவ்வாறு உயிரிந்தது. இக்குழந்தை உயிரிழந்தமைக்கான காரணத்தை அறிய முடியாமையினால் நோய்க்கூற்று ஆய்வுப் பிரேத பரிசோதனைக்கு (Pathological post mortem) வைத்தியசாலைப் பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார். இது தெரியாமலேயே எனினும் குழந்தையின் சடலம் ஆஸ்பத்திரியில் இருந்து உறவினர்களால் கொண்டு செல்லப்பட்டுவிட்டது.

அராலி, மட்டுவில் தெற்கு, யாழ். நகரம், ஆவரங்கால் மேற்கு, கோண்டாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐந்து குழந்தைகளே நோய் அறிகுறிகளுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றிய பின்னரே தமது குழந்தைகளுக்கு இப்படி ஏற்பட்டதாகப் பெற்றோர் கூறுகின்றனர்.

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து, ஆபத்துப் பிரிவினர் (Risk group) எனக்கருதப்படும் ஒன்று முதல் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கே வழங்கப்படுகின்றது.

Aedes வகை நுளம்புகளால் காவப்படுகின்ற ஒரு வகை வைரஸால் பரம்பலடையும் இந்நோய், யாழ். குடாநாட்டில் ஒரு பிரச்சினையாக அறியப்படாத நிலையில் இம்மருந்து குழந்தைகளுக்கு ஏற்றப்பட்டு வருவதாக வைத்திய வட்டாரங்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குழந்தைகளின் ஒவ்வாமை நிலைமை குறித்த சரியான விசாரணைகள் மேற்கொள்ளப்படாது மருந்து ஏற்றப்பட்டமை அல்லது மருந்தைக் களஞ்சியப்படுத்தும் நிபந்தனைகளில் தவறு ஏற்பட்டமையோ குழந்தைகளின் இந்த நோய் மற்றும் உயிரிழப்புக்கான காரணமாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (ம-9-15)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆற்றலை வளர்ப்பதற்கு உலக வங்கி உதவி வழங்கும்

யாழ். குடாநாட்டில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது ஆற்றலை வளப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக உலகவங்கியின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த முரண்பாடுகளுக்குப் பின்னான பகுப்பாய்வாளர் செல்வி நினா கற்றாச்சி, பொதுசன சமூக இணைப்பாளர் சரஸ்வதி தகநாயக்க ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

அவர்கள் நேற்று யாழ். செயலகத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் டாக்டர் வை.தியாகராஜா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி மற்றும் யாழ். செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் க.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். உலக வங்கியின் கொழும்பு அலுவலக பன்முகப்படுத்தப்பட்ட சிறு நன்கொடைத் திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. இந்த உதவிகளைப் பெறவிரும்பும் குடிமக்கள் சார்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உலக வங்கி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த உதவியின் மூலம் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்குப் பயிற்சித் திட்டம் மற்றும் செயலமர்வு ஆகியவற்றை நடத்தி அவர்களது ஆற்றலை வளர்த்துக் கொள்ளமுடியுமென நேற்றைய கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

# தொலைக்கப்பட்ட அ.அட்டையை கொடுத்து படப்பிரதிகள் அபேஸ்

தென்மராட்சி,டிசெ.5

தொலைக்கப்பட்ட அடையாள அட்டையை பிணையாகக் கொடுத்து வீடியோ கடை ஒன்றில் நான்கு படப்பிரதிகளை இளைஞர்கள் சிலர் 'அபேஸ்' பண்ணிய சம்பவம் ஒன்று தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது.

கடைக்கு வந்த சிலர் அடையாள அட்டையைப் பொறுப்பாகக் கொடுத்துவிட்டு ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான நான்கு புதிய படப்பிரதிகள் எடுத்துச்சென்றுள்ளனர். ஒரு வாரமாகியும் அவை திருப்பிக்கொடுக்கப்படவில்லை. சாவகச்சேரி சந்தையில் வியாபாரம் செய்யும் ஒருவரின் முகவரியே அடையாள அட்டையில் இருந்தது. அந்த நபரிடம் சென்று கடை உரிமையாளர் விசாரித்தபோதே தனது அடையாள அட்டை பொறுப்பாகக் கொடுத்து படப்பிரதிகள் பெற்ற விவரம் அந்த நபருக்குத் தெரியவந்தது. சில காலத்துக்கு முன்னர் தனது இந்த அடையாள அட்டை தொலைந்துவிட்டிருந்தது என அவர் கடை உரிமையாளரிடம் தெரிவித்திருந்தார்.

அடையாள அட்டை தொலைந்ததாகப் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதியை அவர் காண்பித்ததும் கடை உரிமையாளர் அதிர்ச்சியடைந்தார். சாவகச்சேரி நகர் பகுதியில் உள்ள கடைஒன்றிலேயே இவ்விதம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## நாளை

கார்த்திகை 20
சனிக்கிழமை
(06.12.2003)
திதி : திரயோதசி
முன்னிரவு 10.08 வரை.
நட்சத்திரம்: பரணி
முன்னிரவு 11.23 வரை.
சுபநேரம்: 3.17-4.47
ராகுகாலம்: 9.17-11.47
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒழுக்கத்தைக் கைவிடாதிருப்பதே நல்வாழ்வுக்கு ஒரே வழி.

# இராணுவத்தை விட்டு தப்பிய சிப்பாய் கைது!

தென்மராட்சி,டிச.5

எழுதுமட்டுவாழ் முகாமிலிருந்து கடந்த ஒகஸ்ட் மாதம் தப்பிச்சென்ற சிப்பாய் ஒருவர் முல்லேரியா இராணுவ சோதனைச் சாவடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று அவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஆயுதத்தை தன்னுடன் கடமையாற்றிய ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு உடைமாற்றிய சிப்பாய் லொறியில் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சிப்பாய் அண்மையில் கொழும்புக்குச் சென்ற வேளை, முல்லேரியா சோதனை சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

ரி.ரி.ஏ.லக்ஸ்மன் ரணசிங்க என்னும் சிப்பாயே கைதுசெய்யப்பட்டவராவார். நேற்றுமுன்தினம் விமானம் மூலம் கூட்டிவரப்பட்ட அவர் கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் அவரை ஆஜர் செய்தபோது சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பா.சுப்பிர மணியம் உத்தரவிட்டார்.

கடந்த ஒகஸ்ட் 24 ஆம் திகதி தப்பிச்சென்ற இந்த சிப்பாய் கடந்த ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. (ம-117)





## யார் இந்த மீனா?

கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை. கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவையும் திறன்களையும் அதிகரிக்கின்றது. புதிய தகவல்களைக் கொடுக்கின்றது. முன்னேற்ற வசதிகளையும் அளிக்கின்றது.

பாடசாலைக்கு போகும் பிள்ளைகள் தாம் வளர்ந்த பின்பு சந்திக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கையாளுவதற்குத் தேவையான தன்னம்பிக்கையினைப் பெறுகின்றார்கள். பெண்பிள்ளைகளுக்கு சமத்துவத்தை அடைவதற்கான முதற்படியாக பாடசாலை கல்வி அமைகின்றது. கல்வி கற்கும் வசதி அவர்களுக்கு கூடிய தகவல்களைப் பெற வழி செய்வதோடு, கூடிய போஷாக்கு, சுகாதார கவனிப்பு ஆகிவற்றைக் கொடுக்கின்றது. கல்வி கற்ற பெண்கள் சுகாதாரமான, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையைப் பெறுவதோடு சமூகத்திலும் பயனுள்ள பங்கை வகிப்பர்.

மீனா போல ஒரு நாளைக்கு செயற்படுதல் எவ்வாறென்பதை ராஜூ அறிந்து கொள்வது நாளை உதயனில்......



(சி-31701)

அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



துன்னாலை மேற்கு, தக்குச்சம்பாதியைச் சேர்ந்தவரும் யா/ நெல்லியடி ம.ம.வி. பழைய மாணவரும் கட்டை வேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்க முன்னாள் இயக்குநரும், தற்போதைய பொதுச்சபை உறுப்பினரும் அகில இலங்கை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு ஊழியர் சங்கச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் துன்னாலை தெற்கு தயாநிதி கிராம அபிவிருத்திச் சங்கம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவரும் தொழிற்சங்கவாதியும் சிறந்த சமூகசேவையாளருமான

### உயர்திரு. பா.தவயோகம்

அவர்கள் 14.11.2003 அன்று சமாதான நீதிவானாக சத்தியபிரமாணம் செய்துகொண்டார். அவரை நாம் மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரின் சேவை மேலும் சிறந்து தொடர இறைவன் அருள்புரிய வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம். (25403)(31-14-16-17) - சீனியர் குடும்பத்தினர்.



## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts upto 02nd January 2004

### FACULTY OF MEDICINE

**Senior Lecturer Gr.I/Senior Lecturer Gr.II/ Lecturer (Probationary) in Community Medicine.**

| Post | Salary Scale |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs. 21,500 - 8x475 - 25,300/- p.m. |
| Senior Lecturer Gr.II | Rs. 18,325 - 5x475 - 20,700/- p.m. |
| Lecturer (Probationary) | Rs. 11,820 - 10x375 - 15,570/- p.m. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, either in person or by post on a payment of Rs.20/- for each form. Those who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of the 'Bursar, University of Jaffna' together with a self - addressed stamped envelope 23x30 cm in size.

Applicants from the University system / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
**University of Jaffna,**
**Sri Lanka.**
**01-12-2003.** (சி-31687)(31-14-16-17)


## "அரசியல் தலைவர்களே சமாதானத்தைக் குழப்பாதீர்!"

"அரசியல் தலைவர்களே சமாதானத்தைக் குழப்பாதீர்கள்" என்ற வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டிகள் யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

தேசிய சமாதானப் பேரவை, யுத்த எதிர்ப்பு தேசிய முன்னணி ஆகியவை இணைந்து தமிழ்,சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல வர்ணங்களில் இந்த சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளன.

அந்த சுவரொட்டிகளில் அதிகாரப் போட்டிகளை நிறுத்தி இனப்பிரச்சினையைத் தீருங்கள் என்றும் கோரப்பட்டுள்ளது. (ம-5)

## நாவற்குழியில் பஸ்தரிப்பு நிலையம்

நாவற்குழிச் சந்திக்கருகில் இருக்கும் காணி ஒன்றில் அந்த இடத்தைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பி பாலகிஷ்ணனின் ஞாபகார்த்தமாக அவரது பெற்றோரால் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ம-75)


## ஆசிரியர் தேவை

10 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவிக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு பிரத்தியேகமாகக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

தகுதி, அனுபவத்திற்கேற்ப சம்பளம் உண்டு. நேரில் வரவும்.

**அ.பரஞ்சோதி J.P.**
**48, சென்.பற்றிக்ஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(25385) (14-16-17)



## இயக்குநர் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்துக்குப் பெண் இயக்குநர் தேவை. க.பொ.த.ப. (உ.த.) உடன் கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்திருத்தல் நன்று. நேரில் வரவும். கவர்ச்சியான கொடுப்பனவு.

**குட்வில்**
**கொமினிகேசன்,**
**48, சென்.பற்றிக்ஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(25386)(14)



## தேவை

கொக்குவிலில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண்பிள்ளை தேவை.

(அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

உங்கள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இல.81,**
**கே.கே.எஸ். வீதி,**
**கொக்குவில்.**
(25405)(31)



## 2 ஆவது வருட நினைவஞ்சலி

பிறப்பு 24 - 09 - 1953



இறப்பு 27 - 11 - 2001

### திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி

**திதி:துவாதசி (05-12-2003)**

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும் அன்புருவம் மறையாது
ஈண்டு உமது நினைவுடனேயே நாமிங்கு வாழ்கின்றோம்
எப்போதும் உமது திருமுகம் கண்முன்னே தெரிகிறதே
இப்போதும் நினைத்தே இரங்கியழுதே தவிக்கின்றோம்.

கணவர்,தாய்,சகோதரர்
குடும்பங்களும் பிள்ளைகளும்,
சி.சிங்கராசாவும் பிள்ளைகளும்.

குப்பிளான்,
ஏழாலை. (25412) (14-16-17)



உ

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும்

## திருவாசக விழா
## பண்ணிசைப் போட்டி - 2003

**மேற்படி பேரவை ஆதரவில் 02.01.2004இல் நிகழ இருக்கும் திருவாசக விழாத் தொடர்பாக மாணவர்களிடையே வழமைபோலப் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளது.**

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் தரம் (2003 இல்) பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர்மூலம் உறுதிப்படுத்தி 19-12-2003 இற்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கவும்.

| பிரிவுகள் | விடயம் |
|---|---|
| 1. ஆண்டு 5-6 | சிவபுராணம் |
| 2. ஆண்டு 7-8 | அப்சோப் பதிகம் |
| 3. ஆண்டு 9-10 | ஆனந்தமாலை |

நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் மோகனராகத்திற்கு பாடிக்காட்டுதல் வேண்டும். அத்துடன், பண்ணிசைப் போட்டியிற் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களதும் சமயபாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

பண்ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெறப்படும். இதில் பண்ணிசைக்கு கூடிய காத்திரம் வழங்கப்படும்.

போட்டி 28.12.2003 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு 02.01.2004 வெள்ளிக்கிழமை நிகழும் திருவாசகவிழாவிற் பணத்தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும.

*தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:*

**திருவாசகப் போட்டிக்குழு,**
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை**
**பண்பாட்டுப் பேரவை,**
**செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.**

"நல்ல இதயம் இறைவனின் சரணாலயம்."
(சி-31691)(31-14-16-17)



## இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல: 2880 சீ.இ. (C.E)
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)
## கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி. (I.F.B)

ஐ.எவ்.பி. இல: எம்யு/நீர்ப்/ஐடி/03 திகதி: 05.12.2003

1. செயலாளர், விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு அவர்கள் 17.11.2003 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்களைத் தகுதியான ஒப்பந்தகாரர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.
2. பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் காலக்கெடு 31.12.2003ஆம் திகதி பி.ப. 15.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
3. பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளைக் கையளிக்கும் காலக்கெடுவும் கேள்விகளைத் திறக்கும் நேரமும் 01.01.2004 ஆம் திகதி பி.ப. 15.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி,
நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு,
வ.கி.மா., திருகோணமலை. (சி-31676)(31-14-16-17)



## முதலாம் கறுப்புப்பட்டி பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்



குடவத்தை, துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த

### செல்வன் தங்கராசா தங்கேஸ்வரன்

அவர்கள் முதலாம் கறுப்புப் பட்டிக்கான
கராத்தே பரீட்சையில்
சிறப்புச் சித்தியெய்தியமைக்காக
பிரதம ஆசிரியர்

**திரு. க.குலேந்திரன் (4th Dan Black Belt)**

அவர்களால் 21.06.2003 அன்று சான்றிதழும்
முதலாம் கறுப்புப்பட்டியும்
மகிழ்வுடன் வழங்கப்பட்டன.

இவரை நாங்கள் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- மாஷல் ஆட்ஸ் அக்கடமி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(25392)(31-14-16-17)

# ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலை நேற்றுமுன்தினம் மூடப்பட்டது

## விடுதியைவிட்டு வெளியேற மாணவர் மறுப்பு

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் நேற்றுமுன்தினம் நண்பகலுடன் திடீரென மூடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் டி.எஸ்.எபிடிவத்த இது பற்றி அறிவித்தார்.

மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனவே, மாணவர்கள் உடனடியாகப் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்தும், விடுதிகளில் இருந்தும் வெளியேற வேண்டும்.

அவ்வாறு வெளியேறாவிட்டால் பொலீஸார் அழைக்கப்பட்டு மாணவர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகப் பேராசிரியர் என். எல்.அமரதாஸ கருணாரத்ன, பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பல்கலைக் கழக வளாகத்தில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

பல்கலைக்கழக நிர்வாகச் சீர்கேடுகளை சீர்செய்யக் கோரியே அவர் உண்ணாவிரதமிருக்கின்றார். அவருக்கு மாணவர்களும், பேராசிரியர்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

பல்கலைக்கழகம் மூடப்பட்டாலும் தாம் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறப் போவதில்லையென மாணவர்கள் அறிவித்துள்ளனர். மாணவர்களுக்கு தொடர்ந்து விரிவுரைகளை நடத்துவதற்குத் தாங்கள் உத்தேசித்துள்ளனர் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் அறிவித்துள்ளது. ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் சட்டத்திற்கு முரணான வகையிலேயே மூடப்பட்டுள்ளது என அந்தச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் ஆசிரியர் நியமனத்தில் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரச தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கு தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சினால ஆசிரிய சேவை 3-II வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது. இத்தமிழ்மொழிமூல ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை கவனத்தில் எடுக்க வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தவறிவிட்டது.

கடந்த 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்று சுமார் 140 உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் வெளியேறி உள்ளனர். இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 300 இற்கும் மேற்பட்ட அரச தமிழ்மொழிப் பாடசாலைகளில் உடற் கல்வி ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு மூலம் அறியவருகிறது.

தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் ஆயிரம்பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகையில், உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கும் இடமளிக்கப்படும் என எமது சங்கத்துக்கு சம்பந்தப்பட்டவர்களால் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அந்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளமையானது எமது சங்கத்தினருக்கு ஆழ்ந்த கவலையையும் கடும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் ஆசிரியர் சங்கம் போராட்டங்களை நடத்தியபோது உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான நியமனம் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. எனினும் அச்சங்கத்தினுடைய ஏனைய கோரிக்கைகள் பலவும் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இந்நிலையில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் விடயம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் தமிழர் ஆசிரியர் சங்கம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கிறோம். இவ்விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட மற்றும் மாகாண அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்றோர் அக்கறையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது.

ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடத்துறைகளில் உடற்கல்வியும் சேர்க்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவேண்டும் என எமது சங்கம் கோருகிறது - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (ஒ-9-5)

# வலுவிழந்தவர்கள் எதிர்பார்ப்பது அன்பையே உதவிகளை அல்ல

## ஒன்றுகூடல் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.5

வலுவிழந்தோர் ஏனையவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பது உதவிகளை அல்ல அவர்களின் உண்மையான அன்பையே.

- இவ்வாறு தெரிவித்தார் வலுவிழந்தோர் சங்க உபதலைவர் கணேசதாசன்.

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்தவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் 12 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. செயலாளர் க.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் இன்று பல நிகழ்வுகள், சர்வதேச தினங்கள் எனக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனால், சர்வதேச வலுவிழந்தோர் தினமானது மிகவும் முக்கியத்துவமானதும் ஒவ்வொருதரும் உணர்ந்து அனுசரிக்க வேண்டியதுமான ஒரு நிகழ்வாகும்.

இன்று உலகிலும் சரி நம் நாட்டிலும் சரி பல விதமான வகைகளில் வலுவிழந்த பலர் இருக்கின்றனர். யுத்தம் காரணமாக பலர் ஊனமுற்றுள்ளனர். பிறப்பிலேயே ஊனமுற்றவர்களாகவும் விபத்துக்களினால் ஊனமுற்றவர்களாகவும் கூட பலர் உள்ளனர்.

இன்று ஊனமுற்றோர் என்ற சொல்லைப்பயன்படுத்தி எமது உறவுகளை நாம் அழைப்போமானால் அவர்களிடம் ஒரு குற்ற உணர்வு ஏற்படுவதனை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

உலக நாடுகளில் பல நிறுவனங்கள் இவர்களுக்கான உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால், ஊனமுற்றோர் ஒவ்வொருவரிடமும் இருந்தும் எதிர்பார்ப்பது உதவிகளை அல்ல உண்மையான அன்பையே. இதனை எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதற்காக உதவிகளை செய்யாமல் விட்டுவிடவேண்டும் என்பதும் அர்த்தமல்ல.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் 30இற்கும் மேற்பட்ட வலுவிழந்தோர் கலந்துகொண்டனர். கால் இழந்த வயோதிபர் ஒருவருக்கு ஊன்று கோல் ஒன்றும் வழங்கப்பட்டது. (ம-6)

# நியாப் -II திட்ட ஆய்வுப்பட்டறை நாளை யாழ். செயலகத்தில்

இணுவில்,டிசெ.5

அடுத்த 5 ஆண்டுகளில் வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்) வடக்கு - கிழக்கில் செயற்படுத்தவுள்ள நியாப்-II திட்டத்தின் ஆய்வுப்பட்டறை நாளை சனிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும். நியாப் திட்டத்தினை மேலும் 500 கிராம அபிவிருத்தித் திட்டமாகவும் இரண்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் உற்பத்தியினை ஊக்குவிக்கும் மாதிரித் திட்டமாகவும் மீண்டும் செயற்படுத்த உலக வங்கி கொள்கையளவில் இணங்கியுள்ளது. அது பற்றிய விளக்கமும் ஆலோசனையும் கடந்த நவம்பர் மாதம் 7, 8ஆம் திகதிகளில் அனுராதபுரத்தில் நடைபெற்ற ஆய்வுப் பட்டறை நிகழ்வில் வழங்கப்பட்டன.

பங்காளரின் பங்களிப்பினை, திட்ட மதிப்பீட்டு ஆவணம் (Project Appraisal Document) தயாரிப்பதற்கு பெற்றுக் கொள்ளும் வகையில் அதேபோன்ற ஆய்வுப்பட்டறைகள் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைவாகவே நியாப்-II இன் மாவட்ட ஆய்வுப்பட்டறை நடைபெறவுள்ளது.

அவற்றில் நியாப் திட்டத்தினை செயற்படுத்தலில் ஏற்கனவே பெற்ற அனுபவம், நியாப் திட்டத்தின் நோக்கம், திட்டத்தின் அமைப்பு, திட்டம் உள்ளடக்கவுள்ள கூறுகள், சமூக வலுவூட்டல், ஜீவனோபாய ஆதார உதவி, திட்டம் செயற்படுத்தல், தனியார் துறையின் பங்களிப்பு மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன என யாழ்.மாவட்ட நியாப் அலுவலகம் தெரிவித்துள்ளது.(ம-49-5)

# இலவச சித்திரப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.5

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திரம் வரையும் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில் உள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் இலவச சித்திரப் பயிற்சியை நடத்தவுள்ளது.

பாடசாலைகளில் தரம் 7-11 வரையான மாணவர்களுக்கு ஒருமாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுள்ளார். (ம-4-10)

# பண்ணிசைப் போட்டி

வடமராட்சி,நவ.5

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை திருவாசக விழாவை ஒட்டி 5ஆம் ஆண்டு தொடக்கம் 10ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டியை நடத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் கல்விகற்கும் தரம், கற்கும் பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றை பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் மோகனராகத்தில் பாடிக்காட்டவேண்டும். சமய பாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும். எனினும், பண்ணிசைக்கு கூடிய காத்திரம் வழங்கப்படும்.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடத்தப்படும். வெற்றிபெறும் மாணவர்களுக்கு அடுத்த(ஜனவரி) மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் திருவாசக விழாவில் பணத்தொகையும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (ம-173)

# கடத்தலில் ஈடுபட்டு வந்த வெள்ளவத்தை வாசிகள் கைது

சிங்கப்பூரிலிருந்து சட்டவிரோதமாக ஒரு தொகுதி பொருள்களைக் கடத்தி வந்தார்கள் என்று கூறப்படும் வெள்ளவத்தைவாசிகள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் 13 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இவர்கள் இலங்கைக்குக் கடத்தி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையினால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவரிடம் இருந்து 20 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 3 தொலைநகல் இயந்திரங்கள், 40 சிகரட் தொகுதிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 5லட்சம் ரூபா ஆகும். இவர் 65 தடவைகள் வெளிநாட்டில் இருந்து சட்டவிரோதமாகப் பொருள்களை இங்கு கொண்டு வந்துள்ளார் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மற்றையவரிடம் இருந்து 8 லட்சம் ரூபா பெறுமதியான வைரக்கற்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவர் எட்டு தடவைகள் இவ்வாறு வைரங்களை கடத்தியுள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாசரின் 'தேவதை' எனும் தமிழ் திரைப்படம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம். (ம)





யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மனன் மங்கள விளக்கேற்றுவதையும் சங்கத்தின் தலைவர் சூ.சிறில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படம் : அரியாலை செய்தியாளர்)

# மாலதி படையணியின் நூல் அறிமுக விழா யாழ். நகரில்

யாழ்ப்பாணம்,டிசெ.5

விடுதலைப் புலிகளின் மாலதி படையணியின் 'விழுதாகி வேருமாகி' நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுக உரையை [illegible] வும்,மதிப்பீட்டுரையினை [illegible] அருளானந்தம், கேரி.கணேசலிங்கம் ஆகியோரும், நிறைவுரையினை ஆ.உலகமங்கையும் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி பிரதிகளை வழங்குவார். (ம-4)

# அனுமதியின்றி சாராயம், பியர் எடுத்து வந்தவர் சிக்கினார்!

## கொடிகாமத்தில் திங்களன்று சம்பவம்

தென்மராட்சி,டிசெ.5

அனுமதிப் பத்திரமின்றி 19 போத்தல் சாராயமும் 8 போத்தல் பியரும் கொண்டு சென்ற நபர் பொலீஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த கிட்டினன் திருநாவுக்கரசு என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். கொடிகாமம் பொலீஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை -

அனுமதிப்பத்திர மின்றி 2 போத்தல் பியர் வைத்திருந்த கொடிகாமம் எருவனைச் சேர்ந்த சரவணமுத்து கிருபாகரன் என்பவருக்கு சாவகச்சேரி நீதிவான் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (எ-117)

# பண்டிகைக்கால கொள்வனவுகள்



























# பரந்தனைப் பகலில் அடித்தால்தான் எதிரிக்கு பகலிலும் பயமிருக்கும் என்றார் தலைவர் பிரபா

## ஒஸ்லோ மாவீரர்தின நிகழ்வில் அமுதாப் உரை

கொழும்பு,டிசெ.4

"நாங்கள் இரவில் மட்டும் தாக்குதல்களை மேற்கொள்வதால் சிங்களப்படைகளுக்குப் பகலில் பயம் இல்லாமல் போய்விட்டது. அவர்களை எந்நேரமும் பயத்துடன் வைத்திருக்க பரந்தன் படைத்தளத்தைப் பகலில் அடிக்கவேண்டும்" என்று தலைவர் எமக்குக் கூறினார்.

- இவ்வாறு தனது அனுபவத்தைப் பகிர்ந்திருக்கிறார் புலிகளின் தளபதிகளில் ஒருவரும், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருமான அமுதாப்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவீரர் நாள், தமிழனின் மானம் காத்த நாள். அந்நாள் இந்நாள். இந நாள் ஒரு பொன்னான நாள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய போராளிகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த வேளை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெல்வதற்காக வியர்வை சிந்தி உழைத்த லெப்ரினன்ட் சங்கர் சத்தியநாதன், துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்படுகின்றான். அப்பொழுது - எதிரி சுற்றிவளைத்த பின்னர் - சண்டை நடக்கிறது. சண்டையில் சங்கர் வயிற்றிலே விழுப்புண் அடைகிறான். எப்படியாவது எதிரியின் முற்றுகையை உடைத்துத் தப்பிவிட வேண்டும் என்பதற்காகக் கடும் முயற்சி செய்து எதிரியின் முற்றுகையில் இருந்து வெளியேறி நீண்ட தூரம் கால்நடையாக ஓடினான். தன்னிடம் இருந்த கைத்துப்பாக்கியைச் சக போராளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதற்காகவே அவன் ஓடினான். விடுதலைக்காக வியர்வை சிந்திய சங்கர், அன்று இரத்தத்தைச் சிந்திக் கொண்டிருந்தான். ஒருவாறாக போராளிகளிடம் சென்ற சங்கர் சிகிச்சைக்காக இந்தியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டான்.

சங்கரை இந்தியாவுக்குக் கொண்டு சென்றபோது, எங்களுடைய தலைவர் இந்தியாவிலே இருந்தார். சங்கரின் குருதி அதிகம் வெளியேறியிருப்பதால், தன்னுடைய குருதியைக் கொடுத்து சங்கர் உயிர் பிழைக்க வைக்க முயற்சித்தார் தலைவர். விடுதலைக்காகத் தன்னோடு போராடுவான என்று தலைவர் எதிர்பார்த்தார். ஆனால், 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி 6.05 மணிக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் மடியிலேயே சங்கர் உயிர் துறந்தான்.

தமிழீழ மக்களைத் தட்டி எழுப்பி அவர்களின் நெஞ்சங்களில் விடுதலை விருட்சத்தை உருவாக்கிய அந்த வீரச்சாவு நிகழ்வு, தமிழ் மக்களின் விடுதலைக்கான முதலாவது அத்திபாரக்கல்லாகும்.

விடுதலைக்காக அதிக மக்களையும் போராளிகளையும் இழந்த தேசத்தின் மண்ணின் மடியிலிருந்து நான் இங்கு வந்திருக்கின்றேன்.

நாம் தமிழர்கள். தமிழ் மக்களுடைய உரிமைக்காக உயிர்களை வெடிகுண்டாக்கி வெடித்துச் சிதறியடிக்கக் கூடிய கரும்புலிகளைப் பெற்றெடுத்த தமிழர்கள் எந்தத் தடையையும் உடைத்து எங்களுடைய தேசத்தின் விடுதலையை வெல்லக்கூடிய உறுதியோடும், தெளிவோடும் எங்களுடைய தேசத்தில் இருக்கும் உறவுகளுடைய இனத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

என்னைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிக சமர்க்களங்களில் நேரடியாகப் பங்கேற்ற விடுதலைப்புலிப் போராளிகளில் நானும் ஒருவன். தமிழ்மக்களின் விடுதலையை யுத்தத்தின் மூலம் வெல்லமுடியும் என்ற நம்பிக்கையில் களத்தில் நேரடியாகப் போரிட்ட சில விடயங்களை - எமது தலைவர் என்னிடம் கூறியதன்படி - நான் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

புலம்பெயர்ந்து - எமது தேசத்திலே உங்களுடைய உணர்வுகள் அனைத்தையும் வைத்துவிட்டு - இங்கே வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள், இங்கே பெருக்கும் உங்களுடைய கல்வி அறிவையும் வளத்தையும் எங்களுடைய தேசத்திற்கு பயன்படுத்த வேண்டும். அதற்காக உங்களை வளர்த்துக்கொள்ளும்படி உங்களிடம் கூறுமாறு தலைவர் என்னிடம் கூறியிருந்தார்.



இவ்வளவு காலமும் இந்த விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பதற்காக - வெற்றிகளைப் படைப்பதற்காக - இந்தக் கொட்டுகின்ற பனியிலும் விறைக்க வைக்கும் பனிக்காற்றிலும் நீங்கள் உழைத்து அனுப்பிய அந்தப் பணத்தின் அறுவடைதான் இன்றைய ஒரு சாதாரண சமாதான காலத்தில் உங்களையும் எங்களையும் இணைத்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்காக எங்களுடைய தேசத்திலே மேற்கொள்ளப்பட்ட பல பாரிய நடவடிக்கைகளை - இராணுவ நடவடிக்கைகளை - உங்களுக்கு எடுத்துக் கூறலாம் என நினைக்கிறேன்.

கிட்டத்தட்ட நான்கு வருட காலப் போர்க்களம் வன்னி மண்ணில் எவ்வாறு நடந்தது? அந்தச் சமர்க்களங்களை நாங்கள் எவ்வாறு முறியடித்தோம்? எவ்வாறு சாதனைகளைப் படைத்தோம்? இவற்றையெல்லாம் உங்களிடம் எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

1997 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி வன்னியை இரண்டாகப் பிளந்து தமிழீழத் தேசியத் தலைவரை இல்லாமல் செய்து தமிழ்மக்களின் விடுதலைப்போரை அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டதுதான் 'ஒப்ரேஷன் ஜெயசிக்குறு' என்ற - வெற்றி நிச்சயம் என்ற - இராணுவ நடவடிக்கை.

ஓமந்தையாலும், நெடுங்கேணியாலும் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 100 மீற்றர் அகலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை இரண்டு வருடங்களில் 80 கிலோமீற்றர் நீளத்தில் 2,500 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை - எங்களுடைய தாய் மண்ணை - சிங்களப் படை ஆக்கிரமிக்கும் வரை சென்றது.

இந்தவேளை வன்னி மக்கள் மரணத்தின் வாசலில் வாழ்ந்து வந்தனர். 5,000 படையினரை இழந்தும் 10,000 படையினர் அங்கவீனராகியும் எமது தேசத்தை சிங்களப்படைகள் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். சிங்களப் படைகளுக்கு அத்தனை உலக நாடுகளும் ஆயுதங்களை அள்ளி வழங்கிக்கொண்டிருந்தன.

'வெற்றி நிச்சயம்' நடவடிக்கை மாங்குளத்திலும், பள்ளமடுவிலும், மன்னாரிலும் மையங்கொண்டிருந்த வேளையில்தான் - 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி புலிகள் இயக்கம் அழிந்து கொண்டிருப்பதாக சொல்லப்பட்ட பொழுது - எமது புதிய சாதனை ஆரம்பமானது.

"ஓயாத அலைகள் - 3" நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் ஊடாக உடைத்து உள்நுழைந்த புலிகள், சிங்களப் படையினரின் இராணுவத் தளங்களை தவிடுபொடியாக்கினர். மின்னல் வேக அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. கரும்புலித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. 2,500 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கைப்பற்ற சிங்களப் படைகளுக்கு இரண்டு வருடங்கள் பிடித்தன. அவ்வளவு நிலப்பரப்பையும் மீளக்கைப்பற்ற எங்களுடைய போராளிகளுக்கு ஆறு நாள்களே போதுமாக இருந்தன.

போரியல் வரலாற்றில் ஆறு நாள்களில் நாம் ஒரு பாரிய வெற்றியை ஈட்டினோம் என்று சொன்னால் அந்த வெற்றிக்கு நீங்கள் வியர்வை சிந்தி அனுப்பிய பணத்தில் வாங்கிய ஆயுதப் பலமும் காரணம். அந்தப் பலம்தான் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை அறுநாள்களில் முறியடிக்கும் சக்தியைத் தந்தது.

விடுதலைக்காகப் போராடும் ஓர் இயக்கம், ஒரு நாட்டின் பலம் வாய்ந்த படையை ஆறு நாள்களில் முறியடித்த வரலாறு உலகத்தில் எங்கே நடந்தது என்று கேட்டால் அது வன்னியில்தான். தமிழர்களுடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அது நடத்தப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

இந்தச் சாதனைகளை - சரித்திரங்களை - படைப்பதற்காக ஒவ்வொரு நாளும் வன்னி நிலப்பரப்பில் எமது உடன்பிறப்புக்களின் உயிர்களையும், இரத்தத்தையும் நாம் விலையாகக் கொடுத்துக் கொண்டே இருந்தோம்.

கஞ்சியைக் குடித்துக் கொண்டு போரிட்டோம். காலில் போடுவதற்கு செருப்புக்கூட இல்லாமல் போரிட்டோம். ஆயுதங்களை இறக்கி எப்படியாவது இந்தப் போரை வெல்லவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு போராடினோம். என்னுடைய தோளிலே, காயப்பட்ட உடன்பிறப்புக்களை சுமந்து சுமந்து எமது சகோதரர்களுடைய இரத்தத்தால் நான் குளித்து விட்டேன். இந்தச் சமர்க்கள நேரத்தில் சிங்களப் படையால் கொல்லப்பட்ட எமது மக்களின் உடல்களையும் தோளிலே சுமந்து போராடினோம். இவ்வளவு நடந்தும், 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை எமக்குப் பலத்தையே தந்தது. சாதாரணமாக இருந்த புலிகள் இயக்கத்தை மரபுவழி இராணுவமாக வளர்த்துவிட்ட பெருமையும் அந்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கையைத்தான சாரும். 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை முறியடித்த போது 'வடபோர் முனைப் பக்கம் சண்டையைத் திருப்புங்கள்' என்று எமது தலைவர் கூறினார்.

யாழ்ப்பாணம் நோக்கிச் சண்டையைத் திருப்பினால் கிளிநொச்சியில இருந்து 7கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள - ஆனையிறவுத் தளத்தின் முன்னணிப் பாதுகாப்புத் தளமான - 2,000 இராணுவத்தினர் காவல காத்த - இறுக்கமான - பரந்தன் படைத்தளத்தை எதிர்கொள்ள வேண்டும்.

"நாம் இரவில் தாக்குதல்களை நடத்தி வந்ததால் சிங்களப் படைகளுக்குப் பகலில் பயம்இல்லாமல் போய் விட்டது. எனவே, 24 மணித்தியாலமும் அவர்களைப் பயத்தில் வைத்திருக்கவேண்டும். ஆகவே, பரந்தன் படைத்தளத்தை நாம் பகலில்தான் அடிக்க வேண்டும்" என்று தலைவர் கூறினார்.

இது ஒரு சவால். போராட்ட வரலாற்றில் புதிய புதிய நுட்பங்களை உருவாக்குபவர் எங்களுடைய தலைவர். நிமிடத்துக்கு நிமிடம் அவருடைய போராட்ட நுட்பங்கள், போரிடும் ஆற்றல், திட்டங்கள் ஆகியவை மாறிக் கொண்டே இருக்கும்.

1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதி. கடுமையான மாரிகாலம். மழை கொட்டிக் கொண்டிருந்தது.

தலைவரின் திட்டப்படி, பகல் ஒரு மணிக்குச் சண்டை ஆரம்பமாகியது. எதிரி அசுர பலத்தில் நிற்கிறான். ஆனையிறவில் இருந்து ஆட்லறிகளை மழையாகப் பொழிகிறான். அவற்றுக்குப் பதிலடியாக மின்னல் வேக அதிரடித்தாக்குதல் நடத்திய புலிகள், தம்மால் எதுவும் முடியும் என்று கூறி மூன்று பக்கங்களால் உடைத்துக் கொண்டு பரந்தன் இராணுவத் தளத்தினுள் பாய்ந்தனர். "இரவில் நாம் அடித்தால் நித்திரைப் பாயில் கிடப்பவன் எழும்பி ஓடிவிடுவான். பகலில் அடித்தால்தான் பார்த்துப் பார்த்துச் சுடலாம்" என்று தலைவர் கூறியிருந்தார். இதனடிப்படையில பகலில் ஆரம்பிக்கப்பட்ட சண்டை சுமார் 23 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடந்தது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் சடலங்களாக வீழ்ந்தனர். ஈற்றில் பரந்தனை நாம் பிடித்தோம்.

அடுத்தது ஆனையிறவு. அமெரிக்கப் பயிற்சியைப் பெற்ற 15,000 இராணுவ வீரர்கள் முப்படைகளின் உதவியோடு காவல் காத்து நின்ற 240 வருடங்கள் வாய்ந்த இரும்புக்கோட்டை அது. யாராலும் எந்த நேரத்திலும் எப்போதும் எதுவும் செய்துவிட முடியாது என்ற இறுமாப்போடு - அகங்காரத்தோடு - ஆணவத்தோடு - அரக்கனைப் போல அங்கு அமர்ந்திருந்தது சிங்களப்படை.

"ஆனையிறவைப் பிடிக்க வேண்டும். ஆனையிறவைப் பிடித்து தமிழ் மக்களுடைய, விடுதலைப் புலிகளின் பலம் என்ன என்பதை நாங்கள் காட்ட வேண்டும்" - என்று தலைவர் கூறினார்.

ஆனையிறவு மீது 1991ஆம் ஆண்டு ஜுலை 10ஆம் திகதி ஆகாயக் கடல்வழி இராணுவ நடவடிக்கை மூலம் தாக்குதல் மேற்கொண்டபோது அதில் 602 போராளிகள் வீரச்சாவடைந்தனர். கடல்வழியாக 8,000 படையினரை வெற்றிலைக்கேணியில் கொண்டு வந்து இறக்கி ஆனையிறவை அன்று இலங்கை அரசு தக்கவைத்துக்கொண்டது.

வெற்றிலைக்கேணியில் எந்தக் கடல்வழியாக இராணுவத்தை இறக்கி ஆனையிறவு அன்று படையினரின் வசம் தக்கவைக்கப்பட்டதோ, அதே வெற்றிலைக்கேணி மண்ணில் இருந்தவாறே ஆனையிறவு மீது தாக்குதலை மேற்கொண்டு அதைக் கைப்பற்றத் தலைவர் திட்டமிட்டார்.

2000ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் கேணல் பால்ராஜ் அண்ணா உட்பட 1,200 போராளிகள் தாக்குதலுக்குப் புறப்பட ஆயத்தமானபோது-

"இந்த வெற்றிலைக்கேணியில் இருந்துதான் ஆனையிறவை சிங்களப்படை அன்று தக்கவைத்தது. இப்போது இதே வெற்றிலைக்கேணியில் இருந்துதான் இலங்கை அரசின் கடற்படைக்கு நிகரான இந்தச் சண்டையை நாம் தொடங்கப் போகிறோம். இந்தச் சண்டையில் செய்கிறீர்கள், அல்லேல் செத்து மடிகிறீர்கள்" - என்று தலைவர் கூறினார்.

வெற்றிலைக்கேணியில் இருந்து ஒவ்வொரு படகுகளிலும் 45பேர் சகிதம் பத்துப் படகுகளில் 450போராளிகள் ஆனையிறவை நோக்கி நகர்ந்தனர். (வளரும்)

# படுகொலையுண்ட மக்களுக்கு நினைவுத்தூபிகள்; தேசியத் தலைவரின் நீண்டகால எண்ணம் இது!

## ஒதியமலை நிகழ்வில் கேணல் பால்ராஜ் தெரிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.5

அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டு அவர்கள் நினைவு கூரப்படவேண்டும் என்பது எமது தேசியத் தலைவரின் நீண்ட கால எண்ணக்கருவாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் மணலாறு மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பால்ராஜ்.

1984 ஆம் ஆண்டு நெடுங்கேணி ஒதியமலையில் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 32 பொதுமக்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே கேணல் பால்ராஜ் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல இடங்களில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்கான நினைவுத் தூபிகள் கட்டப்பட்டு நினைவு கூரப்படவேண்டும். வடக்கு-கிழக்கு தாயகப் பகுதிகளில் எமது தாயக விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.



1987-89 ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினரிடமிருந்து தேசியத் தலைவரைப் பாதுகாத்த மண் இந்த மண். இதனால்தான் முல்லை மண் புனித பூமியாக போற்றப்படுகிறது. இந்த முல்லை மாவட்டத்திற்கு பெரும் வரலாறு உண்டு. வடக்கு-கிழக்கிலுள்ள அனைத்து மக்களும் தேசியத் தலைவரைக் காத்த மண் முல்லை மண் என்பதனை நன்கு விளங்கிக்கொள்வர்கள்.

எமது தலைவர் அந்நிய சக்திகளுக்கு எதிராக நீண்ட காலமாக இந்த மண்ணில் இருந்து போராடினார். அக்காலப்பகுதியில் இந்திய வல்லரசு ஒன்றுடன் போராடி 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரைக் கொன்றும், 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோரை ஊனமாக்கியும் விரட்டியடித்த சம்பவத்தினையும் இந்த மண்ணிலிருந்தே தலைவர் மேற்கொண்டார்.

இங்கிருந்து நாங்கள் இரண்டு அரசுகளோடு போராடி வெற்றி பெற்றுள்ளோம். 1985 ஆம் ஆண்டு நாயாறு நோக்கி படையெடுத்த ஸ்ரீலங்காப் படையினர்மீது மாவீரர் மேஜர் பசிலன் தலைமையில் மண் கிண்டி மலையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். படையினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் இதனால் தடுக்கப்பட்டன என்றார் கேணல் பால்ராஜ்.

இத்திறப்பு விழா ஒதியமலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.கந்தசாமி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கேணல் பால்ராஜ் ஏற்றினார். ஈகச்சுடரினை வவுனியா வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீப் ஏற்றிவைத்தார். நினைவுத் தூபியினை தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் திறந்து வைத்தார்.

நினைவுரைகளை முழங்காவில் மருத்துவமனை மருத்துவ அதிகாரி தர்மேந்திரா உட்பட பலர் நிகழ்த்தினர்.

இதேவேளை, ஒதியமலை பிரதேசத்தில் இருந்து விடுதலைப் புலிகளுடன் இணைந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 21 மாவீரர்களின் நினைவாக அமைக்கப்படவுள்ள நினைவுத் தூபிக்கான அடிக்கல்லும் நேற்று முந்தினம் நடப்பட்டது. நினைவுத்தூபிக்கான அடிக் கல்லினை கேணல் பால்ராஜ் நட்டு வைத்தார். (ஏ-5)

## கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கு 2"x2" ஒட்டு வலையினாலும் ¼"கம்பியினாலும் ஆக்கப்பட்ட பின்வரும் போத்தல் கொன்ரெயினர்கள் தேவை. இவற்றை செய்து வழங்கக்கூடியவர்கள் அதற்கான கேள்விகளை 09.12.2003 ஆம் திகதிக்குப் பிந்தாது சமர்ப்பிக்கவும்.

**1. 25 முழுப்போத்தல் (750மி.லீ.) அடங்கக்கூடிய பெட்டி - 25**
**2. 35 அரைப்போத்தல் " " - 15**
**3. 50 கால்போத்தல் " " - 10**

இவற்றை தனித்தனி ஒவ்வொரு செல்லுக்குள் அடுக்கக் கூடியதாக வடிவமைத்தல்வேண்டும். மேலதிக விவரங்களை கீழ்க் காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(C/31681)(34-14-16-17)

## பத்தாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

பிறப்பு
18
-
11
-
1950



இறப்பு
05
-
12
-
1993

### திருமதி கியோமர் றொசாறி

பறந்து வந்தெழுந்த பொம்மர் பதம் பார்த்தது உனது வீட்டை!
அதிர்ச்சியால் உன் உயிரும் அவலமாய் சென்றதம்மா!
பத்தாவது நிறைவாண்டுகள் பறந்தோடிச் சென்றதம்மா!
நித்தமும் நினைவலைகள் நீங்காத சொத்தேயம்மா!
நினைக்கவே முடியாத திடுக்கிடும் வேளை வந்து
பிரித்துமைச் சென்றதம்மா தனித்தெம்மை ஏங்கவிட்டு
கண்ணுக்கு எட்டாத தொலைவில் நீ சென்றதனால்
கணவருடன் மகள், மகன் நாம் கதறியழுதாலும்
காணவே நீ வரமாட்டாய் கண்கள் கலங்குதம்மா!
எப்போதுவருவாய் என்ற ஏக்கம் எம் நெஞ்சை விட்டு
இப்போதும் மறையாதம்மா எங்கு நீ சென்றுவிட்டாய்?
நித்திய வாழ்வினிலே நிம்மதியாய்த் துயில் கொள்ள
கர்த்தராம் யேசுவிடம் கரம் கூப்பி வேண்டுகிறோம்!

*3ஆம் குறுக்குவீதி,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.* (24943) (14-16-17)

பிரிவால் துயருறும்:
கணவர், மகள், மகன்.

## பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

ஐயாத்துரை ரகுனேந்திரன்
பெண் பொன்னம்பலம்
மகன் ரஜிதா
40/17, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
- வழக்காளி -

வழ.இல.மண நீக்கம்/388 எதிர்

ஐயாத்துரை ரகுனேந்திரன்
ஆடுபாவத்தை,
வதிரி, கரவெட்டி.
- எதிராளி -

மேற்படி எதிராளிக்கு,

இவ்வழக்கு 2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 02 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா சமுகமாக இருக்கவும், 08.08.2003 இல் மன்றின் கட்டளைப்படி எதிராளிக்கு 'உதயன்' பத்திரிகை விளம்பரத்தின் மூலம் அழைப்புக்கட்டளை பதில் சேவகம் செய்யப் பட்டும் எதிராளி மன்றில் சமுகமளிக்கவேண்டிய திகதியான இன்று எதிராளி மன்றில் சமுகம் இல்லாத காரணத்தால் ஒருமுக விளக் கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், வழக் காளி மன்றுக்கு அளித்த சாட்சியம் ஆகியவை பரிசீலனை செய்யப் பட்டு வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதி யுடையவர் எனக்கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 03.09.1998 இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக் காளியை வன்மஉறவுறுப்புச் செய்து கைவிட்டுச் சென்ற காரணத் தால் ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமானதெனப் பின்முற்றாகும் தீர்வையளிக்கப்பட்டு கட்டளை வழங்கப்படுகிறது.

அத்துடன், குறித்த விவாகரத்தின் பின்னர் வழக்காளி தன் கன்னிப் பெயரை பாவிக்கவும் திருமணமாகாத ஒரு பெண்ணுக் குரிய உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவரென பின்னுறுதித் தீர்வையளிக்கப்பட்டு கட்டளையிடப்படுகிறது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பதில் சேவகம் செய்யப்பட்டு மூன்றுமாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அளிக்காத பட்சத்தில் இப்பின்னு றுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ஆம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
**து.சிறீமோகன்,**
பதிவாளர்.

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி,
பவானி சற்குணராசா. (25395) (14-16-17)

## பண்பாட்டியல் பயிலரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் பின் படிப்புகள் பீடத்தின் இரண்டாம் அரையாண்டு பருவ மாணவர்களுக் கான பண்பாட்டியல் பயிலரங்கு நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு உயர்பட்டப்பின் படிப்புகள் பீட இணைப்பாளர் கலாநிதி என்.சண்முக லிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகம் ஆகியவற்றில் முழு நேரமாகவோ, பகுதிநேரமாகவோ பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியைத் தொடரவுள்ளவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கான கடிதங் கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்க னவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம் பலம் அறிவித்துள்ளார். (ம-8)

## வீதி நிலை மோசம்!

சண்டிலிப்பாய்,டிசெ.5

சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு பிர தான வீதியில் பல இடங்கள் பலத்த சேதமடைந்து குண்டும் குழியுமாக உள் ளது. இவ்வீதியில் பிரான்பற்றுக்குச் சமீபமாகவுள்ள இடத்தில் வீதி சேத மடைந்து பாரிய குழி ஏற்பட்டு அதில வெள்ளம் தேங்கியுள்ளது.

இதனால் இவ்வீதி வழியாக சென்று வருவோர் மிகுந்த சிரமப்பட வேண்டி யுள்ளது. (ஒ-135)

## பன்றி வேட்டைக்குச் சென்ற இளைஞர் பொறியில் சிக்கினார்!

யாழ்ப்பாணம்,டிசெ.5

காட்டுக்குள் பன்றிவேட்டைக்குச் சென்ற ஒருவர் பொறிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதி யில் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத் தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பவனீ தரன் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் நண்பர்கள் இருவருடன் பன்றி வேட்டையாடச் சென்றதாகவும் -

வேறு நபர்கள் பன்றிக்காக வைத்த பொறிவெடியில் இந்த இளைஞர் சிக் கியதாகவும் - கூறப்படுகிறது.(ஒ-6-15)

## பளையில் பரவுகிறது வயிற்றோட்ட நோய்

தென்மராட்சி,டிசெ.5

பளைப்பிரதேசத்தில் வயிற்றோட்ட நோய் பரவிவருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. அப்பகுதியில் பெய்து வரும் அடைமழையினையடுத்து இந நோயினால் பாதிக்கப்படுவோரின் எண் ணிக்கை அதிகரிக்கலாமென அஞ்சப் படுகிறது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட பளை வண்ணான்கேணியைச் சேர்ந்த அனுஷ்ரன் சதுர்ஜன் (வயது 1½) அவ ரது தாயாரான அனுஷ்ரன் ஜெயகலா (வயது 20) பளை கரந்தாளையைச் சேர்ந்த நாகேந்திரம் சிவப்பிரியா (வயது 10 மாதம்) ஆகியோர் சாவ கச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஒ-117)

## நிவாரண விநியோகம்

சண்டிலிப்பாய்,டிசெ.5

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டு றவுச் சங்கம் 119 ஆம் இலக்க ஏ.பி. புள்ளிகளுக்கு இடம்பெயர்ந்தோருக் கான இலவச உலர் உணவு நிவா ரணத்தை விநியோகித்து வருகின் றது. இம்முறை நிவாரணத்திற்கு லக்ஸ்பிறே பால்மா பக்கற் வழங் கப்படவில்லை என்று சங்க வட்டாரங் களிலிருந்து தெரியவருகின்றது. (ஒ-135)

## காக்கைதீவில் பனம் விதைகள் நடத்திட்டம்

காக்கைதீவுப் பகுதியில் பனம் விதைகளை நடுவதற்கு யாழ் மாநகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

காக்கைதீவுப் பகுதியில் சுகா தாரச் சீர்கேடுகள் நிலவுவதாகக் கூறப் படும் இடங்களைச் சுத்தப்படுத்தி அங்கு பனம் விதைகளை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
05
-
02
-
1959



இறப்பு
05
-
12
-
2002

### அமரர் அந்தோனிப்பிள்ளை சகாயராசா

*"உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"*

ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
தீராது உங்கள் பிரிவு வேதனை; மாறாது எங்கள் கவலை
நினைவுகள் எமது நெஞ்சில் நீங்காது நிலைத்திருக்கும்!

*இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (25294) (14-16-17)

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
21
-
11
-
1926



மறைவு
05
-
11
-
2003

### திருமதி சரஸ்வதி நவரத்தினம்

(உரும்பிராய் தெற்கு)

அன்புத் தெய்வமே! உங்களின் ஆத்மாசாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2003-11-05 புதன்கிழமை சிவபதமடைந்த திருமதி சரஸ்வதி நவரத்தினம் அவர்களின் சபிண்டீகரணக்கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (05-12-2003) வெள்ளிக்கிழமை ஸ்காபரோ கனடாவில் நடைபெறுகின்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

கனடா தொடர்புகளுக்கு:
E.VETTIVELU,
200BRENYON WAY UNIT 67
SCARBOROUGA - ONT
MIB 3G2
CANADA T.P:416-283-6724
Fax:416-287-6607

தங்கள் பிரிவால் துயருறும்:
மகள்: *சிவமலர்*
மருமகன்: *வெற்றிவேல்*
பேரப்பிள்ளைகள்: *ஜெயன், மகிந்தன், அனுஷா, ஜெயன், சர்மினி*
பூட்டன்: *பிரவீன்.*

*தகவல்: அ. பாலசிங்கம், கோண்டாவில் கிழக்கு.*

(25292) (14-16-17)


# விசேட விலைக்கழிவு

கருமாரி மோட்டோஸ்

❖ லான்ட் மாஸ்டர் ❖ வோட்டர்பம்
❖ ஜெனரேட்டர் ❖ ஓட்டோ
❖ மீன்பிடி இயந்திர உதிரிப்பாகவ் பாவனையாளர்களுக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும்

**விசேட விலைக்கழிவு**

**01.12.2003 முதல் 31-12-2003 வரை**

இல. 281 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணத்தில்
இயங்கும்
எமது நிறுவனத்தின்

20 ஆவது ஆண்டு நிறைவு 10.12.2003 இல் வருகின்றமையால் இந்த விலைச் சலுகைகளை வழங்குகின்றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

(C/31553)(14-16-17) - நிறுவனத்தினர்.

# பேச்சுப் பல்லக்கு; தம்பி கால்நடை: இதுதான் இன்றைய அரசின் நிலை

## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

"பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை" என்பது போலத்தான் அரசின் இன்றைய நிலை காணப்படுகின்றது. ஜனாதிபதியும் பிரதமரும் இன்று சந்திக்கின்றனர், நாளை பேசுகின்றனர் என பத்திரிகைகளும் ஏனைய ஊடகங்களும் பிரசாரப்படுத்துகின்றன. இது ஒரு சினிமாப்படம் பார்ப்பதைப் போலவே இருக்கின்றது.

- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியான எம்.கே.சிவாஜிலிங்கம்.



நாடாளுமன்றிலிருந்து...

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

இன்றைய அரசு பற்பல சாதனைகளை ஏற்படுத்திவிட்டதாகப் பெருமை அடித்துக் கொள்கின்றது.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசு - குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதையுமே செய்யவில்லை.

1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட இன்றுவரை எந்தவித நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை. தென்பகுதியில் நஷ்டஈடுகளை வழங்கியவர்கள் வடபகுதி தமிழர்களைப் புறக்கணித்துவிட்டனர். இந்த வரவு - செலவுத் திட்டம்கூட தனவந்தர்களுக்குக் கோடிகோடியாக நிவாரணம் வழங்கியுள்ளது. ஆனால், நடுத்தர சிறுகைத்தொழில்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, கிழக்கே வாழைச்சேனை காகித ஆலை ஆகியவை கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன. அங்கே பணிபுரிந்த பல ஆயிரம் ஊழியர்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர். இவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவைதொடர்பாக நாம் எத்தனையோ கோரிக்கைகளை விடுத்தும் எங்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது தான் வேதனைக்குரியது. கைத்தொழில் அமைச்சு இதுவரை 375 கோடி ரூபாவை ஆயிரத்து 370 பேருக்குக் கடனாக வழங்கியுள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களிலும் 20 பேருக்கு 5 கோடி ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த அரசின் சமத்துவமா?

வடக்கு - கிழக்கில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இங்கே முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். அவர்கள் நடுத்தர சிறுகைத்தொழில்களை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்குமா? அதற்கான சலுகைகளையும் உதவிகளையும் வழங்குங்கள். நாங்கள் எங்களுடைய பிரதேசத்தை நாங்களே அபிவிருத்தி செய்துகொள்கின்றோம்.

- இப்படி சவால்விட்டார் சிவாஜிலிங்கம் எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அரசமைப்பு, தொழில் முயற்சி, முதலீட்டு ஊக்குவிப்பு, கைத்தொழில், சூழல் இயற்கை வளம், பொது நிர்வாகம் ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதங்கள் அனைத்தும் சமாதானப் பேச்சு, பாதுகாப்பு, புறக்கணிப்பு என்பன தொடர்பாகவே அமைந்திருந்தன. அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சமாதானப் பேச்சுக்களுக்கு பொறுப்பானவர். அதேவேளை, அரசியல் விவகார அமைச்சரும் கூட.

வழமையாகவே, ஏனைய அமைச்சுகளுக்கான விவாதங்களின் போது கூச்சலும், குழப்பமும், குத்தல் பேச்சுகளுமே நிறைந்திருந்தன. ஆனால், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதம் சற்று மாறுபட்டதாகவே இருந்தது.

அதேவேளை, சில எதிரணி உறுப்பினர்கள் அமைச்சர் பீரிஸின் சமாதான முயற்சிகள் தொடர்பாக நல்ல முறையில் விமர்சித்தார்கள்.

முன்னைய அரசின் காலத்திலேயே அரசியல் விவகார அமைச்சு முதன்முதலாக உருவாக்கப்பட்டது. அப்புதிய அமைச்சு பேராசிரியர் பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்றைய அரசும் அவரிடமே அப்பொறுப்பை ஒப்படைத்துள்ளது. கடந்த ஒன்பது வருடங்களாக மாறிமாறி இரண்டு பக்கத்தினரிடமும் இருந்து வந்த தாக்குதல்களைச் சமாளித்தவர் அவர். பேராசிரியரின் பொறுமையும் சகிப்புத் தன்மையும் அவரை சமாதானத்தின் சிற்பியாக்கிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் பாராட்டினர்.

அரச தரப்பின் "பிரசார பீரங்கி" என வர்ணிக்கப்படும் அமைச்சர் ராஜித சேனாரத்ன விவாதத்திற்கு சூடேற்றினார்.

புலிகளின் பொலீஸ், நீதிமன்றங்கள், குரங்குபாஞ்சான் முகாம் அனைத்தும் உடனடியாக ஒழிக்கப்படவேண்டும் என ஜே.வி.பியினரும், பொது மக்கள் ஐக்கிய முன்னணியினரும் போர்க்கொடிதூக்கினார்கள். பாதுகாப்பு அமைச்சு தன்னிடம் இருந்தால் இவற்றிக்கு இடமளிக்கமாட்டேன் என்றார் ஜனாதிபதி.

ஆனால், ஜே.வி.பியினரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியினரும், ஜனாதிபதியும் இப்போதும் இருக்கின்றனர். புலிகளின் முகாம்களும் பொலீஸ் மற்றும் நீதிமன்றங்களும் இப்போதும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், ஒரேயொரு மாற்றம் எதிர்க்கட்சியினரின் வாய்கள்தான் அடைத்துப்போய்விட்டன.

இப்படி ஒரு சாட்டை அடியைக் கொடுத்தார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன.

பின்னர் பொதுநிர்வாக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய கூட்டணி உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் ஆக்கபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்ததோடு, கடந்த காலங்களில இடம்பெற்ற புறக்கணிப்புகளையும் சுட்டிக்காட்டினார்.

"இலங்கையில் 12.5 வீதமான இலங்கைத் தமிழர்களும் 8 வீதம் முஸ்லிம்களும் 5.5 வீதமான இந்தியத் தமிழர்களும் இருக்கின்றனர். ஆனால் அரச, நிர்வாக சேவைகளுக்கு ஆள் சேர்க்கும்போது இந்த விகிதாசார முறை புறக்கணிக்கப்பட்டே வருகிறது. தொடர்ச்சியாக, தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்ததாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்றைய நிலைவரப்படி அரச துறைகளில் 5 வீத ஒதுக்கீடு தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஆனால், இப்பொழுது 2 வீதமான தமிழர்களே அரசதுறை ஊழியர்களாக இருக்கின்றனர்.

அதேபோன்று, நிர்வாக சேவைக்கு ஆள்சேர்க்கும் போதும் தமிழர்கள் முற்றாகவே நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டில் லிகிதர்களாகவும், தட்டெழுத்தாளர்களாகவும் போட்டிப் பரீட்சையின் மூலம் 106 தமிழர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஆனால், இன்றுவரை அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இப்படித் தமிழர்கள் ஓரங்கட்டப்படுவதாலேயே பிரிந்துபோகும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். இதைத் தடுத்துநிறுத்தும் பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது என்று எச்சரிக்கை விடுத்தார் ஜோசப் எம்.பி.

அதேவேளை, ஸ்ரீல.மு.காங்கிரஸ் உறுப்பினரான ரிஸாத் பதியுதீன் பேசும்போது -

அரசால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினால் எமது பிரதேசத்தில் புதிய நியமனங்கள் எதுவும் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும், கடந்த காலங்களில் ஏனைய மாவட்டங்களில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டபோதும், மன்னார், வவுனியா மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமை கவலைக்குரியது. பெருமளவிலான வெற்றிடங்கள் தற்போது காணப்படுவதால் உடனடியாக நியமனங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் அகதிகளாக உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் போதியவையாக இல்லை. இந்த அகதி முகாம்களில் முகாம் அதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள் பிறப்பு, இறப்பு பதிவாளர்களாகப் பணியாற்றவும் அனுமதி வழங்கவேண்டும்.

- இப்படி ரிஸாத் பதியுதீன் வலியுறுத்தினார்.

### சபை அமர்வில் கலந்துகொள்ள

# உறுப்பினருக்குத் தடைவிதிப்பதற்கு சபைத்தலைவருக்கு அதிகாரம் இல்லை

## ஜெயராஜ் எம்.பி. எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் இச்சபையை முறையாக நடத்திச்செல்ல உதவவேண்டும் என்று சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. சபாநாயகரின் அறிவித்தல்களுக்குப் பின்னர் பொ.ஐ.முன்னணி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

'சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை நீங்கள் (சபாநாயகர்) பெயர் குறிப்பிடாமல் ஓர் உறுப்பினரை இன்று சபைக்கு வரக்கூடாது என உத்தரவிட்டீர்கள். ஆனால், நிலையியற் கட்டளையின்படி ஒரு உறுப்பினரை ஒரு நாள் முழுக்க அல்லது ஒரு வாரம் சபைக்கு வரமுடியாதென தடைவிதிக்க சபாநாயகருக்கு அதிகாரம் இல்லை. நாடாளுமன்றம் கூடிய நாளில் எஞ்சியுள்ள நேரத்துக்குச் சபைக்கு வரக்கூடாது என உத்தரவிட்டு உறுப்பினரை வெளியேற்ற அதிகாரம் இருக்கின்றது.

ஒரு நாளோ அல்லது ஒரு வாரமோ சபைக்கு வரக்கூடாதென்று தடைவிதிக்க சபை முதல்வரால் தனியான பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும். நீங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை.

- இவ்வாறு கூறினார் ஜெயராஜ் எம்.பி.

சபை முதல்வர் அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார அப்போது கூறுகையில் -

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து இன்று (புதன்கிழமை) சபாநாயகர் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துவிட்டார். எனவே, இப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது - என்றார்.

அதற்கு ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே -

நான் கூறுவது என்னவென்றால், சபாநாயகர் வழங்கிய தீர்ப்பு தவறு என்பதே. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதென்றால் பிரச்சினையில்லை என்று கூறி அமர்ந்தார்.

அப்போது, தடை விதிக்கப்பட்ட மஹிந்த சமரவீர எம்.பி. பேசுகையில் -

செவ்வாயன்று சபையில் நான் ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்ததற்கே சபாநாயகரிடம் அனுமதி கேட்டேன்.

சபாநாயகரின் கவனம் என்மீது திரும்பாததால் நான் தொடர்ந்து எனது கோரிக்கையை வலியுறுத்த வேண்டியநிலை ஏற்பட்டது. என்மீது ஏதாவது தவறு இருந்தால் மன்னிக்க வேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

அப்போது சபாநாயகர், "ஒரே தடவையில் பல எம்.பிக்கள் எழுந்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பச் சந்தர்ப்பம் கேட்டால், என்னால் ஒன்றும் செய்யமுடியாது. எனவே, இனிமேல் எம்.பிக்கள் சபை நிலையியற் கட்டளைகளை மதிக்கவேண்டும். ஒவ்வொருவராக எழும்பியே தமது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைக்க வேண்டும். மொத்தத்தில் சபை ஒழுங்காக நடைபெற அனைத்து எம்.பிக்களும் ஒத்துழைக்க வேண்டும்"

- இவ்வாறு சபாநாயகர், எம்.பிக்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

# கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்!

*'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'* என்பதற்கிணங்க நாங்கள் ஆலயம் இருக்கும் இடத்தை அண்டி நமது வாழ்விடத்தை அமைத்துக்கொள்ளல்வேண்டும். ஏனெனில், கோயில் இருந்தால்தான் நாம் நற்பழக்கம் உள்ளவர்களாக, உலகில் வாழ முடியும்; நல்லவர்களாகவும் இருக்கமுடியும்.

### சஞ்சலம் போக்கும் ஸ்தலம்

ஆலயமணி ஓசை கேட்டவுடன் நாம் அதிகாலையில் எழும்புகின்ற ஒரு பழக்கம் தானாகவே எமக்கு ஏற்பட்டுவிடும். மேலும் அதைத் தொடர்ந்து கோயிலுக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தில் ஸ்நானஞ் செய்வோம். பின்னர் சோய்ந்துலர்ந்த வஸ்திரந் தரித்து தூய்மையாக இருக்கப்பழகுவோம். மனதிலே சஞ்சலம் ஏதும் இருப்பின் அதைக் களைவதற்காக ஆண்டவனிடம் முறையிட நாம் ஆலயத்துக்குப் போவோம். அது புண்ணியதலமாகும். இப்படித் தினசரி நடக்கநடக்க எமது வாழ்க்கையில் ஒருபிடிப்பு ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பும் ஆர்வமும் வந்துவிட்டால் ஏற்படும் உணர்வு உற்சாகமாக மாறிச் சுறுசுறுப்பையும் தரும். அதுமட்டுமன்றி ஆலய தரிசனம் செய்து அலுவல்களுக்குப் புறப்பட்டால் அங்காரியம் எந்தவிதமான தடையின்றி நிறைவேறும்.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்

### இல்லிடச் சிறப்பு

இந்த விடயத்தைச் சிந்தித்துப் பார்ப்பின் - சீர்தூக்கி ஆராய்ந்து பார்ப்பின் - ஆலயத்துக்கு அணித்தாக நாம் குடியிருப்பதனால் சிறந்த பயனளிப்பது தெரியவரும். வாழ்க்கையில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும். அவற்றுக்குத் தீர்வுகாண முடியாமல் அலைபாய்ந்து தத்தளிக்கும் தற்போதைய காலகட்டத்தில் எமக்கு இறுதி நேரத்தில் உதவுவது ஆலயமாகத்தான் இருக்கும்.

அதனால்தான் நம்முன்னோர்கள் தம் இல்லிடங்களை ஆலயத்தைச் சுற்றி அமைத்தார்களோ என்னவோ! அது அவர் பட்டறிவின் வெளிப்பாடாகவே கருதப்படுகின்றது. அதை மாத்திரமன்றி ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் என்பதால் எமது ஆன்ம ஈடேற்றத்துக்கு நாம் நிச்சயமாக ஆலயத்துக்கு வந்துதான் ஆகவேண்டும்.

### கலைப்பொக்கிஷம்

நமது பாரம்பரிய கலைகள் வளர்ச்சியடையும் இடமும் கோயில்தான். சிற்பக்கலை, ஓவியக்கலை, கூட்டகக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை என்று இன்னோரன்ன கலைகளுக்கும் இருப்பிடம் ஆலயமே. அது கலைப் பொக்கிஷமன்றோ!

இவையெல்லாவற்றையும் விட கோயில் இருந்தால்தான் ஊருக்குச் சிறப்பு; மக்களுக்குச் சிறப்பு; அரசனுக்கும் சிறப்பு. எனவே, ஒரு

ஞானக்கதிர்

நாட்டின் கலைப்பொக்கிஷம் ஆலயம் என்று கூறினால் மிகையாகாது. அத்துடன், இறைவன் உறையுமிடம் கோயில். அந்தக் கோயில் புனிதமாகவும் அதே நேரத்தில் தூய்மையாகவும் இருப்பதே சிறந்தது.

### அருள் சுரக்கும் இடம்


பசுவின் உடம்பில் பால் நிறைய இருக்கிறது. ஆனால், பால் சுரக்கும் இடம் மடிதானே. அதேபோல் இறைவன் பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் அருள் சுரக்குமிடம் ஆலயம்தான். நாம் திருத்தொண்டுகள் செய்து, ஆலயத்தைத் துப்புரவாகப் பேணுவோம்.

திருநாவுக்கரசு நாயனார் திருத்தொண்டு செய்து முத்தியடைந்தார். நாம் புதிதுபுதிதாக ஆலயத்தைக் கட்டிவிட்டால் மாத்திரம் போதாது. நல்லமுறையில் அதைப் பரிபாலித்து வருவதே நல்லது. பார்க்கமுடியாமல் - பேணமுடியாமல் - தாழ்ந்துபோக விடுதல்கூடாது! அவ்வாறு செய்தல் நல்லதல்ல.

### நல்வாழ்வு வாழ

சைவப்பாரம்பரிய கலைகளைப் பேணவும் சம்பிரதாயங்களைப் பாதுகாக்கவும் ஆலயங்களைப் பேணிக் கடவுள் நம்பிக்கையை மனித உள்ளங்களில் ஊன்றிப் பெருக்கவும் நாம் நம்மைத் தயார்படுத்தி சைவத்தின் மேன்மையையும் உலகுக்கு எடுத்துக்காட்டி நல்வாழ்வு வாழத் தலைப்படுவோமாக.

☆




கப்டன் வானதி வெளியீட்டகத்தின்
உருவாக்கத்தில்

2ம் லெப் மாலதி படையணியின்

## விழுதாகி வேருமாகி
## நூல் அறிமுக விழா

**06.12.2003** சனிக்கிழமை
பிற்பொழுது 4.00 மணிக்கு
யாழ்ப்பாணம் நாவலர் வீதி,
நாவலர் கலாச்சார மண்டபத்தில்

கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின்
தலைமையில் நடைபெறுகிறது

அன்புடன் அழைக்கின்றன
கப்டன் வானதி வெளியீட்டகமும்
கலை பண்பாட்டுக் கழகமும்

---

# கூறுவிலை கோரல்
## இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்)

கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள், வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட தனித்தனியான கூறு விலைகளை 2003.12.22 ஆம் திகதி காலை 10.00 மணிவரை இலங்கை மின்சாரசபை கூறுவிலைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பலப்படுத்திய (Reinforced) சிமெந்திலான கம்பங்கள் விநியோகித்தல்:

| | | | |
|---|---|---|---|
| 01. | 8.3 மீற்றர் 100 கிலோ | 500 எண்ணிக்கை கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/54 |
| 02. | 8.3 மீற்றர் 100 கிலோ | 500 எண்ணிக்கை முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/55 |
| 03. | 8.3 மீற்றர் 100 கிலோ | 400 எண்ணிக்கை வேலணை மி.பா.சே.நி. | டிஜிஎம்/என்பி/2003/56 |
| 04. | 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை வேலணை மி.பா.சே.நி. | டிஜிஎம்/என்பி/2003/57 |
| 05. | 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/58 |
| 06. | 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/59 |

நடுத்தர, தாழழுத்த (Medium & Low Voltage) மின்மார்க்க அமைப்பு வேலைகள்:

| | | | |
|---|---|---|---|
| 07. | நடுத்தர, தாழழுத்த மின்மார்க்கம் | கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/60 |
| 08. | நடுத்தர, தாழழுத்த மின்மார்க்கம் | முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/61 |

பலப்படுத்தப்பட்ட (Reinforced) / பிறிஸ்ரெஸ்ற் (Pre - Stressed) மின்கம்பங்களை வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள வேலைத் தளங்களுக்கு ஏற்றி இறக்குதல்:-

| | | | | |
|---|---|---|---|---|
| 09. | அ) 8.3 மீற்றர் 100 கிலோ | பலப்படுத்தப்பட்ட மின்கம்பம் | டிஜிஎம்/என்பி/2003/62 |
| | ஆ) 11 மீற்றர் 350 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| | இ) 13 மீற்றர் 850 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| 10. | அ) 8.3 மீற்றர் 100 கிலோ | பலப்படுத்தப்பட்ட மின்கம்பம் | டிஜிஎம்/என்பி/2003/63 |
| | ஆ) 11 மீற்றர் 350 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| | இ) 13 மீற்றர் 850 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |

கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்தின் பின் உடனடியாகப்
பிரதிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை மின்சாரசபை,
யாழ்ப்பாணம்.

அலுவலகத்திலும்,
மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
வவுனியா.

அலுவலகத்திலும் கூறுவிலைகள் திறக்கப்படும்.

கூறுவிலையாளர்கள் கூறுவிலைப்பத்திரங்களை ரூபா 500/- காசாகவோ அல்லது பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை என்றபெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையையோ சமர்ப்பித்து கீழ்க் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் 2003.12.19 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 3.00 மணி வரை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம். கூறுவிலையாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கூறுவிலைப்பத்திரங்களை இணைப்பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்,**
**இலங்கை மின்சார சபை,**
**536/1, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்பொறியியலாளர்,**
**கிளிநொச்சிப் பகுதி,**
**இலங்கை மின்சாரசபை,**
**பூங்கா வீதி,**
**வவுனியா.**

தொலைபேசி இல: 021 - 222 2496,
021 - 222 3233
024 - 22 22285

தொலைநகல் இல: 021 - 222 2497,
024 - 22 23597

பூர்த்திசெய்யப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களை கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலைவிவரம், கூறுவிலை இலக்கம் என்பன குறிப்பிட்டு மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 2003.12.22 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
மாகாண கேள்விச்சபை, வடமாகாணம்,
இலங்கை மின்சாரசபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
மாகாண கேள்விச்சபை,
வடமாகாணம்.

(சி-31686) (25-14)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## வழங்குநர்கள் தேவை

துறைசார் பயிற்சிபெற்ற தொழிலாளர்/ சாதாரண தொழிலாளர்களுக்கான வழங்குநர்கள் தேவைப்படுகின்றனர். (Labour Suppliers)

10.12.2003 இற்கு முன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் அத்தியட்சகருடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்: 021 - 2226516

தபால்பெட்டி இல:- 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-31700) (25-14)

---

பருத்தித்துறையில் — இன்று முதல் ஆரம்பம்

## 05-12-2003

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளின் பேரில்

ஆண்டு 6, ஆண்டு 7 } பிரபல பாடசாலை மாணவர்களுக்கு சகல பாடங்களும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும் (ENGLISH MEDIUM)

G.C.E O/L A/L 2004 ENGLISH

பாலர் பாடசாலை: 01.01.2004இல் ஆரம்பம். வாரத்தில் 2 நாள்கள் ஆங்கில மொழி மூலம், வாரத்தில் 3 நாள்கள் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படும்.

## ENGLISH STUDY CENTRE

NEAR
URBAN COUNCIL
POST OFFICE

RAJAGIRI
POINTPEDRO

விண்ணப்பப்படிவங்களுக்கு:
கனன் போட்டோகொப்பி சேவிஸ்
பஸ்நிலையம் - பருத்தித்துறை

(35-14) (C/31692)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அலுவலர்
க. ஸ்ரீகரன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் கதிரவேலு சின்னாச்சிப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கத்தினர்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு, சங்கானை.

(சி-31699) (25-14)

---

மட்டுவில் தெற்கு
வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

வளர்மதிக்காய் துளிராக
1936 - 07 - 16



வான்மதிக்காய் உதிர்வாக
1996 - 12 - 05

**அமரர் பொன் நாகமணி**

தொடரும் நினைவுகளில்......
காலவெள்ளத்தில்
கரைந்து போனது - உனது முகம்
கரையவில்லை
உனது நினைவுகள்
உன்னால் செதுக்கப்பட்ட - சமூகம்
மலர்ந்து கொண்டே இருக்கிறது
காலச்சுவடுகளில் - நீ
நடந்த பாதைகளில் - இன்று
நாங்கள் நடக்கின்றோம்
உன் நினைவுகளை
சுமந்து செல்லும் - தென்றல்
உன் உயிர்மூச்சு பட்டதால்
தூய்மையாகி விட்டது
தூயவனே - நீ
காலமெல்லாம் எம்முடன்
வாழ்வது
தொடராக....தொடராக
முடிவுபெறாத
தொடராக.......
சாந்தி பெறுக.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்,
வளர்மதி சனசமூக நிலையம்.

(C/31702)(34-14)

# பயிற்சியின்போது 10 இராணுவத்தினர் சேற்றில் மூழ்கி உயிரிழந்தமை எப்படி?

**திகதி: 26.11.2003**
**நேரம்: பி.ப. 4.30**

விசேட பயிற்சிக்காக எழுதுமட்டுவாளிலுள்ள 2 ஆவது கொமாண்டோ ரெஜிமென்ட் முகாம் அருகே சிப்பாய்களும் அதிகாரிகளும் வரிசையில் நின்றனர். அவர்களுடன் முதலாவது விஜயபாகு காலாட் படைப் பிரிவு மற்றும் கைமுனு ஹேவா படைப் பிரிவின் சிப்பாய்களும் அதிகாரிகளும் இணைந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஏற்பாட்டின்படி யாழ். குடாநாட்டிலுள்ள காலாட்படையினருக்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட காலாட்படை நடவடிக்கை (SPECIAL INFANTRY OPERATION) பாடநெறி தொடர்பான அடிப்படைப் பயிற்சியை வழங்குவதற்காக இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். கடந்த இரண்டு வருடங்களாகவே யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருக்கும் படையினருக்கு இவ்வாறான பாடநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுமார் ஒன்றரை மாதங்கள் நடத்தப்படும் இந்தப் பாடநெறிக்கு 350 படையினரும் அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களது பயிற்சிகள் கடந்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின.

26ஆம் திகதி நடைபெற்ற பயிற்சியில் 173 சிப்பாய்களும் படையினரும் ஈடுபட்டிருந்தனர். இரண்டாவது கொமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த கப்டன் சுமலபிரசங்க விக்கிரமரத்தின இந்தப் பயிற்சிகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.

அன்று காலை 8.30 மணிக்கு எழுதுமட்டுவாளில் உள்ள 2 ஆவது கொமாண்டோ படைப்பிரிவின் முகாமில் இவர்களுக்குத் தொலைத்தொடர்பு தொடர்பான பாடங்கள் இடம்பெற்றன. பிற்பகல் 4.30 மணிக்கு அணிவரிசையில் நிறுத்தப்பட்ட இவர்கள், குழுவுக்கு 35 பேர் வீதம் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

அவர்கள் எழுதுமட்டுவாளிலிருந்து நாகர்கோயில் வரையான பிரதேசத்தில் அமைந்துள்ள நீர்த் தடைகள் உட்பட அனைத்துத் தடைகளையும் கடந்து நாகர்கோவில்வரை சென்று மீண்டும் எழுதுமட்டுவாள் திரும்பவேண்டும் எனப் பணிக்கப்பட்டனர். ஒன்றரை மணித்தியாலத்தில் அவர்கள் ஆரம்பித்த இடத்திற்கு வந்துசேரவேண்டும் என்ற நிபந்தனை சற்றுக் கடினமானதாகவே இருந்தது. இந்தப் பந்தயம் CROSS COUNTRY MARCH என அழைக்கப்படும்.

இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளும் சிப்பாய்களும் பயிலுநர்களாகக் கருதப்பட்டதுடன் கொமாண்டோ படையணியைச் சேர்ந்த 5 கோப்பிரல்கள் இந்தக் குழுக்களுக்குக் கட்டளைகளை வழங்கினர்.

இந்தப் பயிற்சிகள் யாழ்ப்பாணத்திலுள்ள உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நடைபெற்றன.

பிற்பகல் 430 மணிக்கு முன்னேறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இரு குழுக்கள் முதலில் முன்னேறின.

ஒவ்வொரு குழுக்களுக்குமிடையே 50 மீற்றர் இடைவெளி காணப்பட்டது.

கைமுனு படைப்பிரிவு, விஜயபாகு படைப்பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த குழுக்கள் ஐயர் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள பரந்த வயல்வெளிகள் ஊடாக முன்னேறின.

அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்க முன்னர் கொமாண்டோ படைப் பிரிவினரால் அந்தப் பிரதேசம் சோதனையிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் பல நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்த காரணத்தினால் தாழ்வான பிரதேசங்களும் வயல்வெளிகளும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

சீரற்ற காலநிலையின் மத்தியிலேயே இந்தப் பயிற்சி ஆரம்பமானது. சுமார் 2 கிலோமீற்றர் முன்னேறிய இந்த இரு குழுக்களும் வயல்வெளி ஊடாக நீரைக்கடந்து சென்றுகொண்டிருந்தன.







உயிரிழந்த படையினரின் உறவுகள்.

முழங்கால் வரையான நீரில் முன்னேறிக் கொண்டிருந்த குழுவினர் சிறிதுசிறிதாகக் கழுத்து மட்டம் வரையான நீரில் கடந்து கொண்டிருந்தனர். ஒரு குழுவிற்குத் தலைமை வகித்த லான்ஸ் கோப்பிரல் சாமிந்த ஜானக திடீரென நீரில் மறைந்து விட்டார். நீரில் மூழ்கிய அவர் மேலெழுந்தபோது ஏனைய சிப்பாய்களைத் திரும்பிச் செல்லுமாறு சமிக்கை காட்டினார். அந்தச் சமிக்கையைப் புரிந்துகொள்ளாத இரு சிப்பாய்கள் ஒரேயடியாக நீரில் மூழ்கினர். கோப்பிரலுக்குப் பின்னால் சென்றுகொண்டிருந்த 2 சிப்பாய்களே அவ்வாறு நீரில் மூழ்கினர்.

அந்தச் சிப்பாய்கள் நீரில் மூழ்கிலே ஆபத்தில் சிக்கிய குழுவிற்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த விஜயபாகு காலாட்படையைச் சேர்ந்த குழுவினர் நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். எட்டு சிப்பாய்கள் நீரில் மூழ்கிய மூவரைக் காப்பாற்றும் நோக்கில் அப்பகுதிக்குப் பாய்ந்தனர்; அவர்களும் நீரில் மூழ்கினர்.

அப்போது சுமார் 10 அல்லது 12 அடி ஆழமான நீரில் 11 சிப்பாய்களும் ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அந்தப் பகுதியில் அதிக சேறு காணப்பட்டதால் அவர்களால் மேலெழுந்து கரைசேர முடியவில்லை. நீரில் மூழ்கிய 11 பேரில் கோப்பிரல் சாமிந்த பெரேரா மாத்திரம் உயிர் தப்பினார். அவர் நீரில் மூழ்கியபோதும் சேற்றில் சிக்காத காரணத்தினால் அவரால் மேலெழ முடிந்தது. எதிர்பாராத விதத்தில் சேற்றில் சிக்கியதால்

ஏனைய 10 சிப்பாய்களாலும் மீளமுடியவில்லை. அவர்கள் தமது உயிரைக் காப்பாற்ற ஒருவரை ஒருவர் பிடித்துப் போராடிக் கொண்டிருந்தனர்.

வயல்வெளியில் சேற்றுடன் கூடிய பள்ளத்தில் இவர்கள் சிக்கியதாலேயே இந்தச் சோகநிகழ்வு ஏற்பட்டது.

அவ்வேளையில் அங்கிருந்த ஏனைய சிப்பாய்கள் ஒருவருடன் ஒருவர் கைகோர்த்து (மனிதச் சங்கிலி போல்) நீரில் மூழ்கிய தங்கள் சகாக்களைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

நீரால் மூடப்பட்ட சேற்றுப்பள்ளத்தில் சிப்பாய்கள் மூழ்கிவிட்டனர் என்ற தகவல் கிடைத்ததுடன் 55 ஆவது படையணியினதும் யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப் பிரிவினரின் தலைமையகத்தின் கட்டளையின் பேரிலும் இந்த திடீர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

தங்கள் சகாக்களின் உயிரைக் காப்பாற்ற சேற்றில் கடுமையாகப் போரிட்ட படையினர் இரவு 7.30 மணியளவில் இறந்தோரின் உடல்களை மீட்டெடுத்தனர். ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட கோப்பிரல் உடனடியாக ஹெலி மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இருள் மூண்டவேளையில் சீரற்ற கால நிலையின் மத்தியில் நீரில் மூழ்கியவர்களை மிருசுவில் மருத்துவமனைக்கு எடுத்துவந்தபோது அனைத்துமே முடிந்து விட்டிருந்தன.

ஸ்ரீலங்கா இராணுவ வரலாற்றில் பயிற்சியின்போது உயிரிழந்த படையினரின் அதிஉச்ச எண்ணிக்கை இதுவேயாகும். இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர் தியத்தலாவையிலுள்ள இராணுவத்தினரின் பயிற்சி முகாமில் பயிற்சியின்போது 7 சிப்பாய்கள் பலியானார்கள்.

திறமைசாலிகளிடையே மிகத் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக யாழ். குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட விசேட காலாட்படைப் பயிற்சிநெறி தொடர்பான அடிப்படைப் பயிற்சிகளின்போதே எழுதுமட்டுவாளில் இந்தச் சிப்பாய்கள் பலியானார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் காலாட்படைச் சிப்பாய் ஒருவர் பயிலக்கூடிய அதிஉயர்ந்த பாடநெறி இதுவாகும். யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக நிலைகொண்டுள்ள 20 இராணுவப் பிரிவுகளுக்காக இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் ஒரு மாத காலத்திற்குப் பகலில் பயிற்சிகளும் அதன் பின்னர் 2 வாரங்களுக்கு இரவில் பயிற்சிகளும் யாழ். குடாநாட்டிலேயே கொமாண்டோ படையணியினரால் வழங்கப்படுகின்றன.

பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளையில் இவ்வாறான விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பாக இராணுவ மற்றும் பொலீஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கோடைகாலத்தில் வயல்வெளியில் வெட்டப்பட்ட குழிக்குள் இருந்த சேற்றில் சிக்கியே இந்தச் சிப்பாய்கள் மாண்டிருக்கலாம் என இராணுவம் கருதுகிறது.

மரண விசாரணைகளின் போதும் இந்த மரணங்கள் நீரில் மூழ்கியதால் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது உடல்கள் நீரிலிருந்து மீட்கப்பட்டபோது மூக்கு மற்றும் காதுத் துவாரங்கள் சேற்றினால் மூடப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிப்பாய்கள் எவ்வாறு மரணமடைந்தனர்? யாருடைய கவனக் குறைவினால் இந்த விபத்து இடம்பெற்றது? இதற்குப் பொறுப்பானவர் யார்? எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் தடுக்க முன்வைக்கப்படும் சிபார்சுகள் யாவை? ஆகியனவற்றிற்கான பதில்களைக் கண்டறிவது விசாரணைக் குழுக்களின் கடமையாகும். ✦

**தமிழில்: கஜனி**

## லக்பிம வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது



# கூட்டுறவை வளர்த்தெடுப்பதில் முன்னின்றவர் வீரசிங்கம்

*கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 30 ஆவது சிரார்த்த தினம் இன்று.*
*அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.*

**பா.நந்தகுமார்**

வடபகுதியின் கூட்டுறவின் தந்தை எனப்போற்றப்படும் அமரர் வீரசிங்கம் அவர்களை கூட்டுறவாளர்கள் கூட்டுறவின் குரு என்று பேசுகின்றார்கள்.

வடக்கில் கூட்டுறவை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு பெரும் சேவையாற்றிய பெருந்தகை அமரர் வீரசிங்கம்.

பலதுறைகளில் ஆர்வங்கொண்டவராகத் திகழ்ந்தவர். அவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு முன்னணிக்கூட்டுறவாளனாகத் திகழ்ந்தார்.

அவரது செய்கையால் வடக்கில் கூட்டுறவுத்துறை பெருவெற்றி கண்டது.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் அவரது சலியாத உழைப்பும், சரியான வழிகாட்டலுமே ஆகும்.

இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் முதல் தலைவர் என்ற பெருமை அமரர் வீரசிங்கத்தையே சாரும்.

கூட்டுறவு ஒரு மக்கள் இயக்கம். அது ஒரு சமயம் என்ற உணர்வு அவரது உடம்பிலே ஊறியிருந்தது. இதற்கு மாறாக கூட்டுறவு இயக்கத்திற்கு முரணான ஏதாவது சக்தி தோன்றுமானால் அவர் அதைப் பொறுக்கமாட்டார். அது நீதி, நேர்மை முழக்கமாகத்தானிருக்கும். அதன் விளைவே அவரது கூட்டுறவு வெற்றி முழக்கம்.

அமரர் வீரசிங்கம் கல்வித்துறையிலும் அதேநேரம் கூட்டுறவுத்துறையிலும் பிரபல்யம் அடைந்து காணப்பட்டார். எந்தப் பிரச்சினையையும் முகம்கொடுத்துத் தீர்ப்பதில் வெற்றி கண்டவர் அவர். தனக்குக் கீழ்ப்படிவுள்ள கூட்டுறவாளர்களுடன் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். பணியாளர்களை அன்புக்கரம் நீட்டி நேசிக்கும் பெருமை அவரையே சாரும்.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறக்கூடியளவுக்குக் கீழ் மட்டத்தில் உள்ளவர்களை அன்பாகக் கடைப்பிடித்து அணுகும் வல்லமை கொண்டவர்.

கூட்டுறவு நிறுவனங்களிடையே இவர் கூட்டுறவு என்னும் கொள்கையைச் சிறப்பாகச் செயற்படுத்திக் காட்டினார். அத்துடன், கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் ஏராளமான சொத்துக்களை சேர்ப்பதற்கு வழி காட்டினார். வெறுமனே பௌதிக வளங்களை மட்டும் இவர் கட்டி எழுப்பவில்லை. மனித வளத்தை, அதாவது கூட்டுறவு வளர்ச்சிக்குப் பொருத்தமாக மனித சக்தியை நெறிப்படுத்தி சிறந்த தலைவர்களையும் இவர் உருவாக்கினார்.

கூட்டுறவுக் கொள்கையில் ஒன்றான கூட்டுறவுக் கல்வியை மேம்படுத்த யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியை அமைப்பதில் முன்னின்று உழைத்ததுடன் அதன் வளர்ச்சியில் இவர் அரிய பங்காற்றினார்.

ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் இருந்த ரீகல் படமாளிகையில் கூட்டுறவாளர் மாநாடுகளை இவர் நடத்தினார். இம்மாநாடுகளில் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை போன்ற தமிழ்ப்பிரதேசங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன், ஐக்கிய மேற்பார்வை சபையை நிறுவிய இவர், அக்காலத்தில் கூட்டுறவு தொடர்பான மாற்றங்கள், விதந்துரைகளை முன்கொண்டு வருவதற்கு காலத்திற்குக்காலம் நியமிக்கப்படும் அரச ஆணைக்குழுக்கள் வடபகுதி கூட்டுறவுத் தலைவர்களை அணுகி ஆலோசனைகளைப் பெறக்கூடிய அளவிற்கு கூட்டுறவுத் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்பினார்.

இதுமட்டுமல்லாது, சங்கங்களை மேற்பார்வை செய்தல், அவற்றுக்கு ஆலோசனை வழங்குதல், கணக்குப் பதிவுகளைச் செய்தல், எண்பார்வை செய்தல் போன்ற விடயங்களை ஐக்கிய மேற்பார்வை சபையினூடாகச் சிறப்பாக ஆற்றியதுடன், இந்தக் கடமைகளை நிறைவேற்ற கூட்டுறவுத் திணைக்களம் ஒன்றின் அவசியத்தை அரசிற்கு உணரவைத்தார்.

வடபகுதி மட்டுமல்ல சர்வதேச மட்டம் வரை கூட்டுறவுக் கருத்தை நிலைபெறச்செய்து கூட்டுறவு இயக்கத்திற்கு பெருமை சேர்த்த இவர், கூட்டுறவு வளர்ச்சிக்கென அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தை உருவாக்க அரும்பணியாற்றி அதன் முதல் தலைவராக இருந்தார்.

1952 இல் நாடாளுமன்ற உறுப்பினரான இவர், நாடாளுமன்றம் சென்றும் சும்மா இருக்கவில்லை. அங்கேயும் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கும் பாமர மக்களின் கல்விக்காகவும் குரல் எழுப்பினார்.

- இவ்வாறு கூட்டுறவுத்துறை உட்பட மக்களுக்கு சிறந்த சேவைகள் ஆற்றி செயலில் காட்டிய அமரர் வீரசிங்கத்துக்குப் பிரித்தானிய அரசு "பிரித்தானிய சாம்ராச்சிய அங்கத்தவர்" என்ற பட்டத்தையும் "சமாதான நீதிவான்" பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களின் தன்னலமற்ற தியாகங்களால் உருவாக்கப்பட்டதே வீரசிங்கம் மண்டபம். வடபகுதியின் கூட்டுறவு மகிமையை உலகுக்குப் பறைசாற்றியது இம்மண்டபம். *

எமது நிறுவனத்திலும், சாவகச்சேரி கிளை நிறுவனத்திலும்
பாடசாலை விடுமுறைக்கால கணனி வகுப்புக்கள்
Computer Handling (1½ மாதம்)
3rd Batch (Sat - Sun) Start on :06 - 12 - 2003.
4th Batch (Week Days) Start on :08 - 12 - 2003.
மேலதிக விபரங்களுக்கு:
Director: TP-222674
STP Computer World (pvt) ltd. 73, Palaly Road, Kantharmadam, Jaffna.

## சிறப்பு மலர்

சாவகச்சேரி,டிசெ.5

சாவகச்சேரி நகரசபை உள்ளுராட்சி வாரச் சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது. இம்மலரில் சாவகச்சேரி நகர் தொடர்பான விளக்கக் கட்டுரைகளும் நகரசபை தொடர்பான தகவல்களும் இடம்பெற்றுள்ளன. அலுவலக நடைமுறைகள் தொடர்பான விவரங்களும் இதில் அடங்கியுள்ளன. (ஓ-31)

# நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

1. படவரைஞராக பதிவுசெய்தல் - 2004

2004ஆம் ஆண்டு படவரைஞராக பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்யப்பட்டு உள்ளவர்களும் 2003ஆம் ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளவும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

2. வியாபார உரிமம் அனுமதிப்பத்திரம் - 2004

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2004ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தை 2003ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் பெற்று பூர்த்திசெய்து கொக்குவில் / நல்லூர் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

3. நல்லூர் பிரதேசசபை ஆதனவரி அறிவித்தல் 2003 / நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்கள்.

2003ஆம் ஆண்டு 4ஆம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 31.12.2003ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

வெறுங் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் 15%
ஏனைய காணிகள் கட்டடங்கள் 20%

நிலுவை உட்பட 2003ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ஆம் ஆண்டில் பிரதேசசபைகள் கட்டளைச்சட்டம் இல. 134(5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

4. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்.

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத்தருகின்றேன். எனவே, கட்டடங்கள், மதில், மலகூடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு நல்லூர் பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும் என அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

5. வெற்றுப்போத்தல் விற்பனை

கீழ் குறிப்பிட்ட வகையான வெற்றுப்போத்தல்கள் விற்பனை செய்யப்பட உள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

1. 750 மி.லீ. - முழுப்போத்தல்
2. 725 மி.லீ. - கோடியல் போத்தல்
3. 450 மி.லீ. - சிறிய போத்தல்

6. நல்லூர் பிரதேசசபை நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல் 2004

1987ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல. 15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு நடப்பு வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2004ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியின் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவும் வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும். எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2004ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சூழல் அதிகாரச்சபைத் தலைவர் அவர்களால் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 22.11.2000ஆம் திகதிய 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் 'ஆ' பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக இப்பிரதேசத்தில் மேற் குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை / தொழிலை நடத்துகின்ற, உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமை பணிமனையுடனோ / உப பணிமனைகளுடனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற நடவடிக்கை எடுக்கவும்.

- இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 01.01.2004இற்கு முதல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரம் சகல உப பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

04.12.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-31706)(31-11-12)

---

சிவமயம்
அகில இலங்கை சபரிமலை
ஸ்ரீ சாஸ்தாபீடம் நடத்தும்

## ஸ்ரீ ஐயப்பசுவாமி மகரஜோதிப் பெருவிழா

20 ஆம் நாள் மண்டல பூஜை
நவோத்ர ஸகஸ்ர (1009 சங்குகள்)

## மஹா சங்காபிஷேகம்

**இடம்:** ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்.
(ஸ்ரீமான் தம்பையா முதலியார் சத்திரம் கொழும்பு - 13)
**காலம்:** 06-12-2003 சனிக்கிழமை.
**நேரம்:** மாலை 5 மணிமுதல் 9 மணிவரை.

விசேட திரவ்ய அபிஷேகம், திரவ்ய ஹோமம், ஐயப்பன் பஜனை மற்றும் மலையாள பூஜை ஆகியன 22 ஆண்டுகள் தொடர்ந்து 108 தடவைகள் புனித சபரிமலை யாத்திரை சென்ற 'சபரிமலை குருஜீ'
'சர்வதேச இந்துமத குருபீடாதிபதி' 'ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி'
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் J.P.
தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

**அருளாசி வழங்கும் குருமணிகள்**
பிரதிஷ்டா சிரோமணி நவாலியூர் சாமி விஸ்வநாதக்குருக்கள்.
(வித்வத் சபைத் தலைவர் - சர்வதேச இந்துமத குருபீடம்)
சிவாகமவித்வான் சிவஸ்ரீ சி.நா.சோமாஸ்கந்த சிவாச்சார்யார்
(அமைப்பாளர் - சர்வதேச இந்துமத குருபீடம் ஆஸ்திரேலியா)
கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சார்யார்
(சர்வதேச இந்துமத குருபீடம் - லண்டன்)
சிவஸ்ரீ சிவ நித்யானந்த சிவாச்சார்யார் - சங்கானை
(சர்வதேச இந்துமத குருபீடம் - யாழ்.மாவட்டம்)
தேவஸ்தான பிரதம குரு கிரியா பூஷணம்
சிவஸ்ரீ சி.தியாகராஜாக்குருக்கள் - கொழும்பு
சாதகம் - சிவஸ்ரீ ஜோதி பத்மநாதக்குருக்கள் - கண்டி
உபயகாரர் - க.யோகேஸ்வரன் சாமி - கொழும்பு.

---

மகரஜோதி மண்டல பூஜை 21 ஆம் நாள்
மஹிஷி சம்ஹாரம் வேட்டைத்திருவிழா
07.12.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிமுதல்
வில் விளையாட்டு, வாள் விளையாட்டுக்களுடன் சிறப்பாக வேட்டைத் திருவிழா நடைபெறும்.
"சிற்பக் கலைமாமணி"
உபயகாரர் - சரவணமுத்து ஜெயகாந்தன் சாமி
Jena Handycraft, Colombo-15.
அனைவரும் வருக திருவருள் பெறுக!
அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்
46, 7th Lane, Kotahena, Co.-13, Tel.-2393436, Cel.-0722422239.
E-mail-iyappathasan@yahoo.com.

(சி-31705)(31-11-12)

---

## நீங்காத நினைவில் ஈராண்டு

மலர்வு 20 - 08 - 1940



உதிர்வு 27 - 11 - 2001

## அமரர் தம்பிப்பிள்ளை பரமசிவம்

(யாழ். கல்வித்திணைக்கள முன்னாள் ஆவண அறைப்பொறுப்பாளர்)

திதி: 05.12.2003

அன்பின் அப்பா! உங்களை இழந்து ஈராண்டு கழிந்ததுவோ!
இருஜென்மம் எமக்கு இருளாச்சே நிஜத்தை தொலைத்துவிட்டு
நிழலை காண பாரில் எமைவிட்டு ஏன் பிரிந்தீர்கள்...?
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பிரிவால் துயருறும்:
மனைவி: திருமதி ப.பரமசிவம்
பிள்ளைகள்: தர்சினி, வாசுகி, பாமினி.

தற்காலிக முகவரி:
19/2,சாஸ்திரியார்லேன்
அரியாலை.

(25451)(12-11-31)

---

## 47ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1939 - 03 - 22



உதிர்வு 2003 - 10 - 20

## அமரர் வேலுப்பிள்ளை செல்லவினாயகம்

(நடராசா ஒலிபர்) சந்தியா அன் கோ. யாழ்ப்பாணம்

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்போடும் பண்போடும் பாசத்தோடும், எம்மை நல்வழி நடத்தி இன்று எமைவிட்டு பிரிந்த குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைவதாக.

கலைமகள் வீதி,
கல்வியங்காடு.

(25449)(31-11-12)

- குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் நாகம்மா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் நாகம்மா நேற்று (04.12.2003) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தாமு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விதவர் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், குகதேவி, கோசலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்), சிவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாளன், சத்யன், சஞ்சீவன், கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(25444)(31-11-13)

தகவல்:
செ. சிவராஜா,
(மருமகன் - வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி).

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் ஒழுங்கையில் நவீன வசதிகளுடன் 4 அறைகள் கொண்ட (நாலுபக்கச் சுவர்களுடனும் நல்ல தண்ணீர் கிணற்றுடனும்) மேல்மாடி கட்டக்கூடிய நிலையில் புதியவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 6563, 077 6204748 அல்லது 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (25430)

நல்ல இன (ஜேர்மன்) டாஸ்ஸோன் 1½ வயது நிரம்பிய நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜே.ராஜ்குமார் 131, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (25436)

## கார்கள் விற்பனைக்கு

**Fiat Buffet, 404 Pegeot** ஆகிய நல்ல நிலையில் உள்ள கார்கள் உடன் விற்பனைக்குண்டு. முழு நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: **Dr.T.**குலசிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (25429)

## தவறிவிட்டது

வீரசேகரம் சந்திரசேகரன் என்பவரது தேசிய அ.அ. (852162805V), விசேட அ.அ. (0907027159) என்பன 30.11.2003 அன்று உடுவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: அம்பாள் கோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (25402)

பாலகாடு, காரைநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலச்சந்திரன் கலாரஞ்சிதம் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை என்பன 06.11.2003 அன்று கோண்டாவிலுக்கும், காரைநகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ரதிவோச், 62, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (25425)

## சதுரங்க வகுப்பு

சதுரங்க விளையாட்டில் தேர்ச்சி பெற்ற வீரர்களாக ஆகுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சிறுவர் முதல் பெரியவர் வரை எவரும் பங்குபற்றலாம். தொடர்பு: 70/1, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (25410)

## புறொயிலர் தேவை

இறைச்சிக்கோழி (புறொயிலர்) உடன் தேவை. தொடர்பு: சக்தி, 94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காடு சந்தைக்கும் இடையில்). (25424)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1949 இல் பிறந்த, தைமாதம் இத்தாலியிலிருந்து யாழ் வந்து பெண்ணை அழைத்துச் செல்ல விரும்புபவருக்கு 39 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. சீதனம் தேவையில்லை. தொடர்பு: வி.இல. 2114, மே/பா உதயன். (25404)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், 1970 ஆம் ஆண்டு பிறந்த, அரச திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருமான மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விள.இல.2113, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25393)

## விற்பனைக்கு

*மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. மற்றும் சார்ஜர், தொலைபேசி திருத்தப்படும். அத்துடன் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.*

தொடர்பு:

**தனு வீடியோ விஷன்**
**வல்வெட்டி.**
T.P. 060 - 2212496

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சேவிஸ் எஸ்ரேசனுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்பு நேரில்

**'நில் கந்தா'**
**யாழ். வீதி, மானிப்பாய்.**
**(மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்)** (25435)

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் இலக்கம்8 விடைகள்

### வினாத்தாள்-1

| | | |
|---|---|---|
| 1. 4 | 2. 2 | 3. 4 |
| 4. 4 | 5. 1 | 6. 3 |
| 7. 2 | 8. 1 | 9. 2 |
| 10. 3 | 11. 4 | 12. 2 |
| 13.3 | 14.4 | 15. 28 |
| 16. 20 | 17.3 | 18. 4 |
| 19. 3 | 20. 3 | 21. 2 |
| 22. 2 | 23. 2 | 24. 3 |
| 25.4 | 26.4 | 27. 1 |
| 28. 3 | 29. 2 | 30. 3 |
| 31. 2 | 32. 3 | 33. 2 |
| 34.3 | 35. 2 | 36.2 |
| 37.4 | 38. 3 | 39. 1 |
| 40.4 | | |

(40x2½=100புள்ளிகள்)

### வினாத்தாள்-2

01. பொருத்தமான குறியீடுகள் இடல்
02. பா.அருணிகனால் (மகனால்) அப்பாவுக்கு
03. 16ரூபா 50 சதம்
04. பிற்குறிப்பு 05.94 ரூபா
06. 106 ரூபா
07. Father 08.I
09. School 10.Son 11.வீதி
12. நீங்கள் 13.தரம்
14. கடிதம் 15. 5 16. 4
17. 2 18. 3 19. 1
20. ✗ 21. ✗ 22. ✓
23. ✓ 24. ✗
25. (4), (1), (3), (2)
26. பெண்பிள்ளையை
27. சிலைக்கு 28.அம்மா
29. நீ/உன்னை 30.நின்றாய்?
31. சிந்துகின்றாய்?
32. தலை/பூ 33. வா
34. என்னை 35. சிரம்/சென்னி
36. விழி/நயனம்
37. அன்னைமார்
38. பூக்கள் 39. நீங்கள்
40. பாடசாலைகளுக்கு
41. Head
42. Flower
43. Eye
44. You
45. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி
46. சிக்னல் பற்பசையைப் பாவியுங்கள்
47. பாற்பற்கள்
48. 32
49. கனவுரு
50. 8,12
51. உணவை அரைக்க
52. 2450g/2kg 450g
53. 5.00ரூபா 54. 30ரூபா
55. ரூபா 83.25 56.14ரூபா
57. 5ரூபா 10 சதம்
58. 77ரூபா 25 சதம்
59. ඉරලෝසුව
60. පිහිය
61. පැන
62. පොත
63. කොපෙල්
64. 0.7
65. 3249
66. 36 மீற்றர்
67. 31 நாள்கள்
68.2000
69-74- பொருத்தமான கருத்துடைய வசனங்கள்.

### புள்ளித்திட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ⇨ | | = | 3 |
| 2 - 24 | ⇨ | x 1 | = | 23 |
| 25 | ⇨ | x 1 | = | 4 |
| 26 - 44 | ⇨ | x 1 | = | 19 |
| 45 | ⇨ | x 1 | = | 3 |
| 46 - 49 | ⇨ | x 1 | = | 4 |
| 50 | ⇨ | x 2 | = | 2 |
| 51 | ⇨ | x 2 | = | 1 |
| 52 - 58 | ⇨ | x 2 | = | 14 |
| 59 - 63 | ⇨ | x 1 | = | 5 |
| 64 - 74 | ⇨ | x 2 | = | 22 |
| | | | | 100 |

## சமுதாயத் தொண்டருக்கு பயிற்சி வகுப்பு

சமுதாயத் தொண்டர்களுக்கான பத்துநாள் பயிற்சி வகுப்புகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில கடந்தமாதம் இடம்பெற்றன.

வலுவிழந்தவர்களுக்கான சமுதாய மட்டரீதியிலான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இப் பயிற்சி வகுப்புகளில் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தலா 10 பேர் பங்குபற்றினர்.

பயிற்சிபெற்ற தொண்டர்கள் தத்தம் பகுதிக் கிராமங்களில் புனர்வாழ்வு தொடர்பான ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்வர். (ஓ-152)

## தவறிவிட்டது

**SAGEM, MC3000 Model** கைத்தொலைபேசி யாழ்.தேசிய சேமிப்பு வங்கிக்கும், பருத்தித்துறை வீதி வழியாக கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில் 04.12.2003 தவறிவிட்டது. பார்வைக்குறைபாடுடைய எனக்கு இது பேரிழப்பாகும். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு எண்கள்:- 0777110962.
0777111284.
0776141072.

**க.தர்மசேகரம்,**
**65, செருக்கப்புலம் லேன்,**
**கோண்டாவில் கிழக்கு.** (25433)

## கண்ணீர் அஞ்சலி

எமது பள்ளியின் பகுதித்தலைவர்
**திருவாட்டி பவானி தியாகலிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்
### திருவாட்டி சண்முகநாதன் பவளரத்தினம்

அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்
*உடுப்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்* (25406)(26-14-21)

## பத்தொன்பதாவது நினைவஞ்சலி



### போல் பஸ்தியாம்பிள்ளை

(J.B.S ஔடதராவகம் உற்பத்தியாளர்)

தோற்றம் 1925-01-06 மறைவு 1984-12-05

**ஆண்டுகள் பத்தொன்பது சென்றாலும்**
**ஆழ்ந்த துயரத்திலிருந்து ஆறவில்லை எம்மனம்,**
**வாழ்கின்றோம் இவ்வுலகில் உங்களது நினைவுடனே**
**என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி**

உங்களை எப்பொழுதும் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர், நண்பர்கள்,

தகவல்-
மகன்: *ஜெ.பீ.பிள்ளை,*
*ரீகன் கொட்,*
*37, மாட்டின் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி லீலா பஸ்தியாம்பிள்ளை
100-905, Wingarden Cr. Scarborough
MIB-2P-4 ONTARIO CANADA

(25431) (26-14-21)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



**உத்தியோகபூர்வ முடிவுகள்**
**செல்லுபடியாகும் டிக்கட்**
**தொடர் இல. 2204657 இருந்து**
**2221815 வரை**
**சீட்டிழுப்பு இல. 1458**
**திகதி 03.12.2003**



## வெற்றி எண்கள்

**06 29 40 51 54** போனஸ் எண் **36**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.2,307,600/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,307,600/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 114 | 10,000/- | 1,140,000/- |
| 3 | 5,341 | 500/- | 2,670,500/- |
| 2 | 89,550 | 20/- | 1,791,000/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 06ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 109,988 | 10/- | 1,099,880/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,001,380/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.3,156,350/-**

தொடர் இல. 3173756க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 06ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**2217244-0-67**
**2206784-6-51**
**2205251-9-25**
**2218870-4-21**
**2211935-7-28**

PHOENIX O&M



**யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு பரந்த வலையமைப்புடன் கல்விச் சேவையாற்ற ஜனவரி முதல் வாரத்தில்**

**சுன்னாகத்திலும், நெல்லியடியிலும்**
**ASIAN COMPUTERS**

**O/L மாணவர்களுக்கான கொம்பியூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஆரம்பம்**
**மேலும் பல சலுகைகளுடன் எதிர்பாருங்கள்.**

# ASIAN COMPUTER SYSTEMS

**யாழ்ப்பாணம் சுன்னாகம் நெல்லியடி**

# தமிழ்மொழிமூல ஆசிரியர் ஆள்சேர்ப்பு விண்ணப்பங்களில் பல்வேறு குளறுபடிகள்

## கண்டிக்கிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

திருகோணமலை,டிசெ.5

தமிழ்மொழிமூல ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்வது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதோடு, மாகாணத்தின் தேவைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்திலேயே பல்வேறு விதமான குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குவுக்கு சங்கம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ்மொழிமூல மாணவர்களின் தரமிக்கதும், நிலைத்துநிற்கக் கூடியதுமான கல்வியில் சிறிதளவேனும் அக்கறைகொள்ளாமலும் -

மாகாணக்கல்வி அமைச்சினதும், கல்வித் திணைக்களத்தினதும் கோரிக்கைகளையும் சிபாரிசுகளையும் புறந்தள்ளி, ஆசிரிய நியமனத்துக்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு மூன்று வருடங்களாக இழுத்தடித்துவந்த கல்வி அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ள விளம்பரமானது தரமான கல்வி அபிவிருத்தியில் அக்கறையுடைய அனைவருக்கும் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு விஞ்ஞானம், கணிதம், ஆரம்பநெறி, ஆங்கிலம், சங்கீதம்/நடனம்/சித்திரம், விவசாய விஞ்ஞானம், மனையியல், பொருளாதாரம், உடற்கல்வி மற்றும் கடல்நீர் உயர்வள தொழில்நுட்பம் ஆகிய பத்துப் பாடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்யுமாறு கோரியிருந்தது.

ஆனால், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் ஆரம்பநெறி ஆகிய 4 பாடநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏனைய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகமாகவுள்ளதுடன், கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இப்பாடத்துறைகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதனாலேயே, இந்நிலை ஏற்பட்டது.

இந்த நியமனங்கள் மாகாண சேவைக்கு உரியவை என்பதால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கே நியமனம் வழங்கப்படவேண்டும். ஆனால், தற்போது இலங்கையின் எப்பாகத்திலுள்ளவர்களும் நியமனம் பெறக்கூடிய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்களின் சந்தர்ப்பம் பறிபோகும் நிலை ஏற்படும்.

அதுமட்டுமல்லாது, இந்த நியமனத்தினைப் பெறும் வெளிமாகாண ஆசிரியர்கள் தமக்குரிய செல்வாக்குகளைப் பயன்படுத்தி விரைவில் இடமாற்றம் பெற்றுச்செல்லும் நிலை ஏற்படும். இதனால், இப்பகுதிகளில் கல்வி நீண்டகாலநோக்கில் பாதிப்பை ஏற்படுத்தும்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பரீட்சையைக் கொழும்பில் நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை இம்மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலேயே நடத்தவேண்டும். அதனைப் பரீட்சை ஆணையாளரால் நடத்தமுடியாது எனில், அதற்கான அதிகாரத்தை வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் பரீட்சைச் சபையிடம் ஒப்படைக்கவேண்டும்.

இந்த நியமனத்திற்கான உச்ச வயதெல்லை 30 வயதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை 45 வயதாக மாற்றியமைக்கவேண்டும். ஏனெனில், 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. அதுமட்டுமல்லாது, இந்த ஆசிரியர் நியமனத்தினை வழங்க அமைச்சரவை 2000 ஆம் ஆண்டு அங்கீகாரம் வழங்கியது. ஆனால், காலம் இழுத்தடிக்கப்பட்டதால் வயதெல்லை மாற்றியமைக்கப்படவேண்டும்.

தொண்டர் ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோர் ஆற்றியசேவைக்கேற்ப புள்ளிகள் வழங்கி ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என அமைச்சர்கள் வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. இந்த நியமனத்தில் அவர்களையும் உள்வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்குரிய அடிப்படைத் தகுதியாக ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் தமிழ்மொழி உட்பட 3 பாடங்களில் சித்திபெற்றிருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உயர்தரப் பரீட்சையில் தோற்றாத, தமிழ் பாடத்தைத் தெரிவு செய்யாத வர்த்தகம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் கலைப் பிரிவில் தமிழ்மொழியில்லாத வேறு பாடங்களில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களாக வரும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

ஆரம்பபிரிவு ஆசிரியர்களுக்கு தமிழ்மொழிச் சித்தி அவசியமெனக் கல்வி அமைச்சுக் கருதின் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் ஏதாவது 3 பாடத்தில் சித்தியுடன் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் தமிழ்மொழியில் விசேட சித்தியைக் கருத்திற்கொள்ளலாம்.

எனவே, மேற்குறிப்பிட்ட அம்சங்களைக் கருத்திற்கொண்டு திருத்திய புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை மிக விரைவில் வெளியிடவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்து விதிமுறைகளில் சில மாற்றங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ். மாநகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் போக்குவரத்து விதிமுறை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

★ போக்குவரத்தில் ஈடுபடுகின்ற அனைத்து மினிபஸ்களும் தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள மினி பஸ் தரிப்பிடங்களில் மட்டுமே விடப்படுதல்வேண்டும்.

★ யாழ் ஸ்ரான்லி வீதியில் வாகனங்களை ஒருநாள் ஒரு பக்கமும் மறுநாள் மறுபக்கமும் நிறுத்தி வைக்க அனுமதிக்கப்படும்.

★ கஸ்தூரியார் வீதியில் கடைகளுக்கு முன்பாக சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்கள் நிறுத்தப்படுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய நடைமுறைகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போன்று நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (ம-7)

## ஆங்கில பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.5

கரவை பொன்னம்பலம் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு இன்று காலை 7 மணிக்கு ஆங்கில பாடத்துக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 8 மணிக்கு உடற்பயிற்சி நடைபெறும் என்று வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

பொன்னம்பல வித்தியாலயமும் கரணவாய் மத்தி கோல்ஸ் விளையாட்டுக்கழகமும் இணைந்து இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளன. (ஒ-10)

## காலத்தின் பதிவு



வீட்டில் அடுப்பெரிய வேண்டாமா? படம்: தீபன்

## யாழ். மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக பொன்னுத்துரை குகநாதன் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ். சமூகநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தராக பணிபுரிந்த இவர், அண்மையில் நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்.

தற்போது யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றும் சி.நடராசா மிகவிரைவில் ஓய்வுபெறவுள்ளமையை அடுத்தே அவரது இடத்திற்கு குகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-5)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலைப் பாவனைக்கென இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் வைத்து உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் வண்டிகள் இரண்டையும் பெற்றுக்கொள்ளவென யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளரும் இரு சாரதிகளும் கொழும்பு சென்றுள்ளனர்.

கொழும்பு சென்ற பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகத்திடம் அம்புலன்ஸ்கள் சுகாதார அமைச்சர் தயாரத்னவினால் நேற்று சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இரு அம்புலன்ஸ் வண்டிகளும் உடனடியாக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படவுள்ளன. நோயாளர்களின் உடனடி தேவைகள் கருதி இந்த இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என யாழ்.வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-6)

## மண் எடுக்கும் விழா

தென்மராட்சி,டிசெ.5

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலயத்திற்கு புதிய தீர்த்தத் தடாகம் அமைக்கப்படவுள்ளது.

தடாகம் அமைப்பதற்காக மண் எடுக்கும் சமயவிழா எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.19 மணிக்கு நடைபெறுமென ஆலயபரிபாலன சபைச் செயலாளர் ச.வீரசிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-117)

## மூலிகை சேகரிப்பு மழையால் முடக்கம்

நெடுந்தீவு,டிசெ.5

நெடுந்தீவின் தென்பகுதியில் மழை காரணமாக வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால், அப்பகுதியில் உள்ள மூலிகைகளைச் சேகரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் மூலிகை வகையைச் சேர்ந்த தும்பை, காளான் போன்ற பயிர்கள் அதிகம் காணப்பட்டபோதும் வெள்ளம் காரணமாக அவற்றைச் சேகரிப்பது சிரமமாக உள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

நெடுந்தீவில் தற்போது ஒரு கிலோ தும்பங்காய் 25ரூபாவாக விற்பனையாகிறது. இது ஒரு மூலிகை வகையைச் சேர்ந்தது என்பதால் உள்ளூரில் இதற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ஒ-111)

## ஓய்வூதிய கணிப்பீட்டுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.5

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தினால் நாளை சனிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு யாழ். செயலகத்தில் ஓய்வூதியக் கணிப்பீட்டுப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தலா ஒரு அலுவலரைக் கலந்துகொள்ளுமாறு யாழ். செயலகக் கணக்காளர் கேட்டுள்ளார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றும் ஓர் அலுவலரின் பெயர் விவரங்களை இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு முன் யாழ். செயலகக் கணக்காளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு நகர சபை மற்றும் பிரதேச சபைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-5)

### வீதிச்சோதனையின் போது

## மோட்டார் சைக்கிளால் பொலீஸாரை மோதியவர்களுக்கு விளக்கமறியல்

பொலீஸ்காரரை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுத் தப்பிச்சென்ற இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

திருநெல்வேலி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் முன்பாகப் பொலீஸார் வாகன ஆவணப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வீதிவழியாக இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். அவர்களைப் பொலீஸ்காரர் ஒருவர் வழி மறித்தார். ஆனால், அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளால் பொலீஸ்காரனை மோதித் தள்ளிவிட்டுத், தப்பிச்சென்றனர்.

இதில் பொலீஸ்காரர் காயமடைந்தார். அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து விசாரணை நடத்திய பொலீஸார் இளைஞர்கள் இருவரைக் கைதுசெய்தனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த மேற்படி இளைஞர்கள் இருவரும் கடந்த இரண்டாம் திகதி யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (ஒ-5-8)

## வாகனப் பற்றாக்குறையால் சுத்திகரிப்புப்பணி பாதிப்பு!

### மாநகரசபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

நகர சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ள வாகன வசதி போதாதுள்ளதாக யாழ்.மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மாநகரசபைப் பகுதி வீதிகளில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணியைத் திருப்திகரமாக மேற்கொள்ள 27வாகனங்கள், குறிப்பாக டிராக்டர்கள் தேவைப்படுகின்றன. ஆனால், தற்போது 7டிராக்டர்கள் மட்டுமே இப்பணிக்குப் பயன்படுத்த முடிகிறது.

ஆனால், 27 டிராக்டர்கள் இருந்ததால் தினமும் அனைத்துப் பகுதிகளிலும் நகர சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்ளமுடியும். ஆனால், தற்போது உள்ள வாகன வசதிகளைப் பயன்படுத்தி ஒருபகுதியில் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் மட்டுமே கழிவகற்றும் பணியை மேற்கொள்ளமுடிகிறது.

இது தொடர்பாக வருடாவருடம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்பட்டபோதும் எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

- இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-7)

# முந்தல் வான் விபத்தில் ஒருவர் பலி; நால்வர் காயம்!

புத்தளம்,டிசெ.5

புத்தளம்-கொழும்பு வீதியில் முந்தல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார்; நால்வர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்சமயம் புத்தளம் "அல்-ஜித்தா" மீள்குடியேற்றக் கிராமத்தில் வசிக்கும் குடும்பத்தினர் கொழும்புக்கு வான் ஒன்றில் பிரயாணம் மேற்கொண்டனர். வான் பாதையைவிட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது.

வானில் பிரயாணம் செய்த முஹம்மது ஜஸாஹிர் (வயது-26) விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் அங்கு மரணமானார்.

இவருடன், ஒன்றாகப் பயணம் செய்த சகோதரர்களான நௌபான் (வயது-37), மஹ்ரூஸ் (வயது-44), உறவினர்களான ஸாஹிர்(வயது30), சஜித் (வயது-5) ஆகியோர் கொழும்பு வடக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

புத்தளம்-முந்தல் பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். (எ)

# சுகாதார ஊழியரின் கோரிக்கைகள் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில்!

சுகாதாரசேவை ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த புதன்கிழமையளவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்ற எழுத்து மூலமான உறுதியை சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவை ஊழியர்களின பிரதிநிதிகளிடம் நேற்று மாலை கையளிக்கவிருந்தார்.

இதுதொடர்பாக அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் செனால் பெரேரா தெரிவிக்கையில்:-

சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்பே அமைச்சின் இந்த யோசனை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக பொருளாதாரக் கொள்கைச் சபையிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. அந்த யோசனையை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், அமைச்சர் இதனை எழுத்து மூலம் தமக்கு உறுதிப்படுத்த வேண்டும் என்பதே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோரின் கோரிக்கை. ஆகவே, அதனை எழுத்து மூலமாக இன்று அவர்களிடம் வழங்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)


மாவை கொல்லங்கலட்டி
பிள்ளையார் கோயில்
**திருக்கார்த்திகைத் திருவிழா**

07-12-2003 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் திருக்கார்த்திகைத் திருவிழா நடைபெறும்.
10.00 மணிக்கு தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரவும். அழைத்துச் செல்லப்படும்.
மறுநாள் பிள்ளையார் கதை ஆரம்பம்.

(25456)(30-12-11) - அறங்காவலர்.



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்க
**பொதுக்கூட்டம்**

மேற்படி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 08.12.2003 திங்கள் பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த.கந்தையா
அதிபர்.
(25452)


## கண்ணீர் அஞ்சலி

நேற்று 04.12.2003 காலமான எமதுபாடசாலைஆசிரியர்
**தம்பிராசா சுதர்சன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு. அதிபர், ஆசிரியர், மாணவர்கள், யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்.
(25459)(12-13-)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 04 - 11 - 1955



இறப்பு 03 - 11 - 2003

காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட
**அமரர் இரட்ணகோபால் சிவராசா**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முடன்
வாழ்ந்திட்ட அப்பாவே!
உங்கள்பிரிவைத் தாங்கமுடியாமல்
தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

No.11, 2 ஆவது சப்பல் லேன்
வெள்ளவத்தை, கொழும்பு - 6 (25447)(12-10) - குடும்பத்தினர்.

## நிறுவுநர் நினைவுதினம்

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர் அமரர் பொன் நாகமணியின் 7ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று பிற்பகல் 6 மணியளவில் வளர்மதி கலை அரங்கில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். இந்நிகழவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்கிறார். (எ-9)

## மின்தடை பற்றி அறிவிப்பு

பராமரிப்பு வேலைகள் காரணமாக பின்வரும் இடங்களில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 5மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபையின் பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இணுவில்,தாவடி,கதுமலை, கொககுவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணப்பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மருதனார்மடம், மானிப்பாய், உடுவில் மற்றும் சங்குவேலி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு மின்சாரம தடைப்பட்டிருக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் திருத்த வேலைகள் முடிவடைந்தால் எந்நேரமும் மின்சாரம் வழங்கப்படலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-5)


சிறந்த கல்வி நிறுவனம்
நல்ல ஆசிரியர்கள்
இவற்றைத் தெரிவுசெய்துவிட்டீர்களா?
**BARATHY**
சித்தன்கேணி
நாளை ஆரம்பம்
தரம் 5 முதல்
11 வரை
சனி காலை 8 மணி
விஞ்ஞானம்: திரு.தேவா
திரு.பாலச்சந்திரன்
கணிதம்: திரு.எஸ்.சிவரூபன்
திரு.சீவா
தமிழ்: திரு.குகபரன்
திரு.தமிழ்மாறன்
சமூகக்கல்வி: திரு. சுதன்
திரு.சிவபாலன்
ஆங்கிலம்: திரு.விஜயபாஸ்கா
திரு.திலகர்
சமயம்: திரு.தரன்
வர்த்தகம்: திரு.லோகேஸ்வரன்
தமிழ்இலக்கியம்: திரு.குகபரன்
சுகாதாரம்: திரு.நிரோஜனன்
புலமைப்பரிசில் வகுப்பு:
(தரம் 5)
திரு. கலாமோகன்
குறிப்பு: அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.



லஷ்சுமி சினிமா இணுவில்
ஜீவா. ஸ்ருதிகா.
பிரகாஸ்ராஜ் நடிப்பில்
அரசு (25411)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜீத், மீராஜஸ்மின், ரகுவரன், சுபாலி நடித்த
ஆஞ்சநேயா
நாளை முதல் பிரியமானதோழி

லிடோ அச்சுவேலி
விக்ரம், ஜோதிகா, ரீமாசென், விவேக் நடித்த
தூள்





காட்சிகள்.: 3.00, 7.00. (பு.நே.) (C/31621)

விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
CATCH ME IF YOU CAN

ராஜா யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
சிலம்பரசன், ஷெரீப் நடித்த
காதல் அழிவதில்லை
2 FAST 2 FURIOUS இரவு 9.30 மட்டும்.


# மரண அறிவித்தல்கள்

## வடிவேலு முத்துலக்ஸ்மி

பருத்தித்துறை, இன்பருட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி வடிவேலுவின் அன்பு மனைவி முத்துலக்ஸ்மி நேற்று (04.12.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமசாமி-தங்கக்குஞ்சு தம்பதிகளின் புத்திரியும் பொன்னுத்துரை செல்லம் அவர்களின் சகோதரியும் ஜெயரத்தினகாந்தம் (டென்மார்க்), விஜியலக்ஸ்மி (கனடா), ஜெயலக்ஸ்மி (கொலண்ட்), மோகனா (சுவிஸ்), பவா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாவதி (டென்மார்க்), உதயசிங்கம் (கனடா), மதியழகன் (கொலண்ட்), ராஜன்குமார் (சுவிஸ்), இளமுருகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பிருந்தாயினி, நிலானி, ஜெயந்தினி (டென்மார்க்), பிரியங்கா, சிறீராம் (கனடா), அமலன், அஞ்சலி, ஆஷா(கொலண்ட்), அஜித், அபினா(சுவிஸ்), மிதுலா, இளந்திரையன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 07.12.2003 ஞாயிறு காலை 10.00 (பு.நே.) பருத்தித்துறை (சுப்பர்மடம்) பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இன்பருட்டி,
பருத்தித்துறை. (C/31711)(31-12-11) தகவல்: செ. இரத்தினசிங்கம் (மருமகன்).

## திருமதி சண்முகராசா ராசம்மா

கோபால் லேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி சண்முகராசா ராசம்மா 03.12.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசாவின் அன்பு மனைவியும் பஞ்சாட்சரம், கஜேந்திரன் (குணா), சந்திரசேகர் (மோகன்), உதயகுமார் (ஓட்டோ சாரதி), சந்திரகுமார் (ஓட்டோ சாரதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி (குஞ்சு), இராஜலட்சுமி (பேபி), இராணி, மகேஸ்வரி (ஜெயந்தி), விஜயராணி (விஜி) ஆகியோரின் மாமியாரும் ஹரிதாஸ், விஜயதாஸ், சுகி, கஜன், விஜயதாஸ், உமாநந்தினி, நுசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

359/4, கோபால் லேன்,
வண்ணார்பண்ணை. (25454)(31-12-11) தகவல்: - குடும்பத்தினர்.

## திருமதி சின்னப்பு ஞானம்மா

இளவாலை, பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும், வயாவிளானை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 60, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வில் வசித்தவருமாகிய திருமதி சின்னப்பு ஞானம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை, கிளாரம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பிள்ளை சின்னப்புவின் மனைவியும், அன்ரனிராஜா (பிரான்ஸ்), மரியநாயகம் (பிரான்ஸ்), அலோசியஸ் (பிரதம கணக்காளர், உள்ளூராட்சி மாகாண அமைச்சு, கொழும்பு), மேரியசிந்தா (U.K), மங்களநாயகம் (பிரான்ஸ்), நேசராணி (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் இராசதுரை, மேரிமுத்தம்மா, பஸ்ரியாம்பிள்ளை, ஞானப்பிரகாசம் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சின்னப்பு, பிலிப்பையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ( 06.12.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (25454)(31)

தகவல்:
- எஸ். அலோசியஸ்(மகன்)
எஸ். மரியநாயகம்(மருமகன்)
(பிராந்திய ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம்)

## வைரவப்பிள்ளை முருகேசு

(பலாலி தெற்கு, வயாவிளான்)

பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை முருகேசு அவர்கள் நேற்றுமுன்தினம் (03.12.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் வயவநாதன்(கிராம உத்தியோகத்தர்,கந்தர்மடம் வடகிழக்கு J/103), இலங்கநாதன், விஜயநாதன், பாஸ்கரநாதன், பத்மநாதன், இரத்தினேஸ்வரி, விஜயலட்சுமி, மகேஸ்வரி, செல்வராணி, பத்மராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வ.சிவமணி, கிருஷ்ணாதேவி, சிவமணி, லயகௌரி, கலா, நடராசா, வன்னியசிங்கம், சிவஞானபானு, நித்தியானந்தன், சத்தியானந்தன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 07.12.2003 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 44, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக)

தகவல்:
மு.வயவநாதன்
(கிராம உத்தியோகத்தர், J/103)
(25458) (13-12-11)

## மண்டலம் செல்வலக்சுமி

(மண்டலம்மா)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும கொண்ட மண்டலம் செல்வலக்சுமி (மண்டலம்மா) அவர்கள் காலமாகிவிட்டார்

அன்னார் ராசதேவி (இந்தியா), கமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேந்திரன்(லண்டன்), சிறிபாலா ஆகியோரின் மாமியாரும் துரைசிங்கம் (லண்டன்), கஜதீபன் (இந்தியா), பார்த்தீபன், தர்ஸ்சிகா, பிரியங்கன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சுன்னாகம் கோத்தியாலை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகேசபண்டிதர் வீதி,
சுன்னாகம்தெற்கு,
சுன்னாகம். (C31712) (12-11)

தகவல்:
த.சிறிபாலா (மருமகன்)
(சிறி)

# பிரஜா உரிமைச் சட்ட அமுலாக்கம்: ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

## கொழும்பில் இன்று நடக்கிறது

கொழும்பு,டிசெ.5

இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கைப் பிரஜைகள் என்ற அந்தஸ்தை வழங்கிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயும் அதிஉயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று இன்று ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

22 பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட நலன்புரி நிதியம் என்பனவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் ஜனாதிபதியால் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரஜா உரிமை பெற வேண்டியவர்களில் 95 வீதமானவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். ஐந்து வீதமான இந்திய வம்சாவளியினர் நகர் புறங்களில் வசிக்கின்றனர்.

எனவே, தோட்டத் தொழிலாளர்கள் தாம் தொழில்செய்யும் தோட்டங்களில் தோட்ட நிர்வாகங்களின் ஊடாக தமது பிரஜா உரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளும் முகமாகவே ஜனாதிபதி இந்தச் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பிரஜா உரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறிப் பல்வேறு மோசடிகளும் ஊழல்களும் இடம்பெறுகின்றன என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்தே அரசியல், தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் தோட்ட நிர்வாகங்களின் மூலம் தொழிலாளர்களுக்கான பிரஜாவுரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப்பணி பெருந்தோட்ட நலன்புரி நிதியத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் எனவும் தோட்டத் துரைமார் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (எ)

### ஒரே நாடான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு எழுத்து மூலமாக அளித்த பதிலில் இவ்வாறு கூறிய அமைச்சர் பெர்னாண்டஸ், மன்னார் கடற்பகுதியைக் கண்காணிக்க விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறினார்.

இலங்கையின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் நிலைநிறுத்தப்பட வேண்டுமென இந்தியா கருதுகிறது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்று பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர் பெர்னாண்டஸ் பேச எழுந்ததும், காங்கிரஸ், இடதுசாரி, ராஷ்டிரிய ஜனதாதளம் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (எ)

### முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அடுத்து, விடுதலைப் புலிகள் நேற்றுமாலை சிப்பாயை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்தனர். அவர்கள், குறிப்பிட்ட சிப்பாயை படைத்தலைமையகத்திடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - முன்னர் ஒரு தடவை திருகோணமலையில் கடமையாற்றிய போது படையிலிருந்து தப்பி ஓடிய இந்தச் சிப்பாய் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார் என்றும் - கூறப்பட்டது. (எ-4)

### தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்படவில்லை.

கிண்ணியா நிலைவரம் தொடர்பாகவும், அது குறித்த புலிகளின் முழுமையான - மேலதிக கருத்துக்களையும் இச்சந்திப்பின்போது புலிகளிடம் தாம் பெற்றுக்கொள்வர் என்று ரவிராஜ் எம்.பி.தெரிவித்தார்.

### மூதூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இரண்டாவது தடவையாக இடம்பெறறுள்ளது.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட 22 ஆவது படைப் பிரிவு அதிகாரியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் ஸஹீர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதித் தலைவர் கேட்ஸ்பர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்று வெள்ளிக்கிழமைமுதல் தமிழ் மக்கள் ஆலங்கேணி பிரதான பாதை வழியாக கிண்ணியா செல்ல ஒழுங்குகள் செய்வது என்று சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதிக்கான பஸ் சேவையினை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும் இங்கு உறுதியளிக்கப்பட்டது.

புலிகளின் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக புலிகள் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் என்று சந்திப்பில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரி தெரிவித்தார். (எ-4)

# இலங்கைக்கு இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கின்றேன்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்பது இந்தியாவின் கருத்தாகும். இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகள் முன வைத்த இடைக்கால நிர்வாக யோசனை ஏற்றுக்கொள்ள முடியாதது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இது பற்றி விடுதலைப் புலிகளுக்கு நல்ல சிந்தனை ஏற்படும் என நம்புகிறேன்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா ஆரம்பம் முதலே தெளிவான சிந்தனையுடனே இருந்து வருகின்றது. விடுதலைப் புலிகள் முன வைத்த யோசனைகள் தொடர்பாக இந்தியா மிகுந்த உன்னிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

பத்திரிகைகளில் வெளியான செய்திகளின்படி திருகோணமலைத் துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது என்பதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. எது எவ்வாறாயினும், அந்த அறிக்கை சரியானதல்ல என நான் நினைக்கின்றேன். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகம் சார்ந்த விடயத்தில் இலங்கையும் இந்தியாவும் கூட்டாகச் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் டக்ளஸ் தேவானந்தா, ஹரிம் பீரிஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ)

# இன்று ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமாகப் பூர்த்திசெய்கின்றது.

இவ்விரண்டு வருட காலத்திற்குள் பிரதமர் புலிகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையினால், பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் நிம்மதி உருவாகியுள்ளது. பாரிய உயிர் இழப்புகளும் தவிர்க்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், தொழில் முயற்சி, பொருளாதாரத் துறைகளில அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அபிவிருத்தி என பலவற்றிற்கும் அடித்தளம் இட்டதே பிரதமரின் சமாதான முன்னெடுப்புகள்தான்.

ஆனால், ஜனாதிபதியின் திடீர் நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுகளைத் தடைப்படுத்திவிட்டன. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இங்கு வந்த நோர்வே பிரதி வெளி உறவு அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற ஒரு அரசியல் தளம்பல் நிலையில் எப்படிப்பேச்சைத் தொடர முடியும்? யாரை நம்பிப் பேசுவது? என்று கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

யார் ஆட்சி புரிந்தாலும் சரி, இன்று உடனடியாக சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்காக பொதுவான இணக்கப்பாட்டுடன் கொள்கை வகுக்கப்பட வேண்டும். அதற்கான அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும் அதுதான் இன்றைய அவசியம்.

ஆனால், இப்பொழுது நாட்டில் யுத்த பீதி ஏற்பட்டுள்ளது, கிழக்கு மாகாணத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைமை கேள்விக்குறியாகி விட்டது.

எனவே, மேலும் காலம் கடத்தாமல் இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் நடைபெற்றன. ஏழுதடவைகள் கூடிப் பேசி உள்ளனர். பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. ஆனால், அவற்றை எல்லாம் இங்கு வெளியிடமுடியாது. எனினும், இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் ஒரு இறுதி முடிவு காணப்பட வேண்டும் என இரு பக்கத்திலும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் இன்று நடைபெறும் சந்திப்பின் போது சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பது குறித்துப் பிரதமர் பேசுவார்.

சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்லும் முழுப் பொறுப்பும் ஒருவரின் கையில் இருக்க வேண்டும். பாதுகாப்பும் அவரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும். வெட்டிக் குறைக்கப்பட்ட அதிகாரங்களோ பத்திரிகைகள் கூறுவதுபோல் பாதுகாப்புக்குத் துணைபுரியும் பொறுப்போ எந்தவிதமான நன்மையையும் ஏற்படுத்தமாட்டா. அவை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதை பிரதமர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இவ்விடயம தொடர்பாக இரு பக்க இணக்கப்பாட்டுடன் ஓர் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பிரதமர், ஜனாதிபதியிடம் வலியுறுத்துவார் - என்று அமைச்சர் பீரிஸ் கூறினார்.

ஜனாதிபதி அதனை மறுத்தால் அல்லது 15 ஆம் திகதிக்கு முன் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் பேச்சு தோல்வி அடைந்தால் அரசின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பப்பட்டது.

ஆரம்பத்திலேயே தோல்வியைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் பேசுகின்றோம். அப்படியே தோல்வி அடைந்தால், அப்போது மாற்றுத்திட்டம் என்ன என்பதை அரசு தீர்மானிக்கும், இப்போது அவசரம் வேண்டாம் - என்றார் அமைச்சர் பீரிஸ். (எ)

### வலி. வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிட்டுள்ளேன். மக்களும் நானும் சொந்த ஊருக்கு, சொந்த இடத்துக்கு செல்வதற்கு அனுமதி மறுப்பது, அரசமைப்பின் மூலம் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கையாகும்.

✪ எனது வீட்டில் வாழ சமத்துவ உரிமையும் சட்டப்படியான உரிமையும் எனக்கு உண்டு. அங்கு நடமாடவும் வாழவும் எனக்கு உரிமையும் உண்டு. இந்த உரிமைகளை நான் அனுபவிக்க முடியாதுள்ளது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து பிரதிவாதிகளும் இந்த உரிமையை மறுத்து செயற்பட்டுள்ளனர்.

✪ புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் கூட அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சருக்கு கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பினேன். அதற்கு 5.11.2003 இல் அனுப்பிய பதிலில், பலாலி பாதுகாப்பு வலயத்துக்குள் எனது பிரதேசம் வருவதால் அங்கு செல்ல அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

✪ சட்டப்படியோ - அல்லது வர்த்தமானி அறிவித்தல்படியோ கூட பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்படாத ஒரு விடயத்தை வைத்துக்கொண்டு எனது சொந்த இடத்துக்கு நான் செல்வதைத் தடுக்க இடமில்லை. எனவே, என்னை எனது வீட்டில் மீளக்குடியமர அனுமதிக்கும்படி உத்தரவிடுவதோடு, மேலும் உரிய நஷ்டஈட்டை வழங்கவும் கட்டளையிட வேண்டும் - என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை எதிர்வரும் 9,10, 11 ஆம் திகதிகளில் நீதிமன்றில் எடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிகள் கோரியுள்ளனர். (எ-3-4)


**அரசாங்க கணக்காளர் சேவையில் ஆள்சேர்ப்பிற்கான தயார்ப்படுத்தல் விரிவுரைகள்**

அரசாங்க சேவையிலுள்ள கணக்காளர்கள் மற்றும் பட்டயக்கணக்காளரினாலும் 13.12.2003 தொடக்கம் விரிவுரைகள் நடைபெற உள்ளன.

உடன் பதிவுகளுக்கு: **IPAS** 199, பிரதான வீதி, யாழ். (பிறீமியர் பேக்கர் மேல் மாடி).

அலுவலக நேரம் : Sat & San 8.00 - 3.00 மணி.
Tel: 0777 - 563292 / 563294

(சி-31700)(31-11-13)

**போட்டிப் பரீட்சைகளுக்கான பொது உளச்சார்பு**

ஆசிரியர் : த. நவசேகர் B.Sc.
ஆரம்பம் : 06.12.2003 காலை 10 மணி
இடம்: வெலிங்டன் சந்தியிலிருந்து 10M கிழக்கே.
ஆசிரியர் சேவை, கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சைகளுக்கானது.
சனி, ஞாயிறு தினங்களில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

(25453)(31-11-13)

**LOGIC**

மாதிரிப் பரீட்சைகள்
★ அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.
★ வெளிமாணவரும் பரீட்சைக்கு தோற்றலாம்
★ இறுதித் திகதி 20.12.2003
★ பதிவு நேரம் சனி, ஞாயிறு } 7 a.m. - 5 p.m.
பதிவு செய்யும் இடம்:
**BRIGHTMAN**
நீராவியடி, நாவலர் வீதி.
★ By: P. கமல். (31-) (25421)

**NEW SCIENCE COLLEGE**

2004
வெப்பவியல் (வாயு விரிவு)
வெள்ளி - 10 - 12.30
மின்னியல்
சனி, ஞாயிறு - 8 - 9
2005
ஒளியியல்
சனி, ஞாயிறு - 11 - 12.00
By: R. குகன். B.Sc.

**சித்த மருத்துவ மாணவர்களுக்கான கலந்துரையாடல்**

| | | |
|---|---|---|
| இடம் | : | பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பொது அறை. |
| காலம் | : | 06.12.2003 காலை 8.30 மணி. |
| விடயம் | : | 14.12.2003இல் மன்னாரில் இடம்பெற உள்ள சுகாதார கல்வி தொடர்பானது. |
| குறிப்பு | : | இக்கலந்துரையாடலிற்கு சமுகம் அளிக்காதவர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளாதவர்களாக கருதப்படுவர். |

செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(25401)(31-11-13)



**மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் சுபானு வருடம் கார்த்திகைத் திங்கள் 19ஆம் நாள் (05.12.2003) வெள்ளிக்கிழமை மு.ப. 8.00 - 9.47 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில், எம்மால் புதிதாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பெற்ற

**ஒப்டிலக்ஸ்** முழுக் கண்ணாடியகத்தை

ஆரம்பித்து வைக்க திருவருள் கை கூடியுள்ளது. அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

516, ஆஸ்பத்திரி வீதி,
(OPD முன்பாக) யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு. ந.சிவகுமார் (சிவா).





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.